பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 12 | சனிக்கிழமை | (26.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 190

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
☞ வங்கிக்கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 222 7310
021 222 7555
021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramall.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# அமெரிக்க கடற்படைக் கப்பல் இலங்கைக்குக் கைமாறியது

## கடற்படைத் தளபதி தயாசந்தகிரி கப்பலை நேற்றுப் பொறுப்பேற்றார்


(நமது நிருபர்)

**இலங்கையின் கடற்பிராந்தியத்தைத் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தும் வகையில் இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்காவிடம் இருந்து நவீனரக கரையோர ரோந்துக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றது. இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி வாஷிங்டனில் நேற்று கப்பலைப் பொறுப்பேற்றார்.**

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில், அமெரிக்கக் கரையோரப் பாதுகாப்புப் பணியில் பயன்படுத்தப்பட்டுவந்த 'கரேஜஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இக் கப்பல் நேற்று இலங்கைக் கடற்படைத் தளபதியிடம் வைபவரீதியாக கையளிக்கப்பட்டிருக்கிறது.

இக் கப்பலைக் கையளிக்கும் உத்தியோக பூர்வ வைபவம் வாஷிங்டன் பாதுகாப்புச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)



## கருணாவுக்கு இராணுவம் உதவியதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லையாம்

### கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர்

(வவுனியா)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணாவுக்கு இராணுவம் உதவியதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் எதுவும் இல்லையென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

தற்போது கருணா விவகாரத்தினால் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையிலும் அரசும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப நடந்து கொள்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்புகள் இடைநிறுத்தப்பட்ட பின்னர் அங்கு நிலைமை மோசமாகி வருகின்றது.

மட்டக்களப்பில் இராணுவம்-விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரையும் சந்திக்க வைக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அதில் தாம் வெற்றிபெறுவது உறுதியெனவும் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பில் இருந்து கருணா வெளியேறுவதற்கு இராணுவம் உதவியிருப்பது தெரியவந்திருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ள

## இராணுவத்துடனான சந்திப்பிற்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

(மட்டக்களப்பு)

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் இன்று அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ள சந்திப்பில் தாங்கள் பங்குபற்றப் போவதில்லையெனப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழர்களைப் பிளவுபடுத்தும் முயற்சிகளில் இலங்கை அரசு கருணா மூலம் ஈடுபட்டது நிரூபணமாகியுள்ள நிலையில், இச் சந்திப்பில் தாங்கள் கலந்து கொள்ளப்போவதில்லையென்பதை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக கருணாவிற்கு உதவிய விவகாரம் பூதாகரமாகத் தோற்றம் பெற்றுள்ள இன்றைய சூழலில் இவ்வாறான சந்திப்புக்களைத் தவிர்க்கப் போவதாக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரொருவர் தெரிவித்துள்ளார்.(ச)

## யாழ்.பல்கலைப் பிரதிநிதிகளை வழிமறித்து ஆர்ப்பாட்டம்

### வவுனியாவில் நேற்று நடந்தது

(வவுனியா)

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்களின் வாகனத்தை முற்றுகையிட்டு வவுனியா வளாக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா வளாக மாணவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தரின் பிரதிநிதிகளும் மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமாரும் நேற்று முன்தினம் வவுனியாவுக்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் நேற்று மாணவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர். அவர்களுடன் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரும் கலந்து கொண்டார்.

மாணவர்களின் பிரச்சினைகளுக்கான சில உறுதி மொழிகளை யாழ்.பல்கலைக் கழகப் பிரதிநிதிகள் முன்வைத்த போதும் அதனை மாணவர்கள் ஏற்க மறுத்தனர்.

இதனையடுத்து பல்கலைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் மனைவி - பிள்ளைகளை அலிஸாகீரே மலேசியாவுக்கு அனுப்பினார்

### புலிகள் தெரிவித்ததாக பி.பி.ஸி அறிவிப்பு

(லண்டன்)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணாவை நாட்டை விட்டு வெளியேற்றுவதன் மூலம் தமது அமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவை சரிசெய்ய உதவுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகீர் மௌலானாவை தாம் கேட்டுக் கொண்டதை விடுதலைப் புலிகள் ஒத்துக் கொண்டுள்ளதாக பி.பி.ஸி தமிழோசை நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.

தலைவர் வே.பிரபாகரனால் கருணாவுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போதே தாம் அலிஸாகீர் மௌலானாவுடன் தொடர்பு கொண்டதாகவும் அதனால் கிழக்கை கருணாவிடம் இருந்து மீட்பதற்கான சண்டை ஆரம்பித்த பின்னர் அலிஸாகீர் மௌலான தலையிட வேண்டுமென்பது தமது விருப்பமில்லையெனவும் புலிகள் கூறியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகீர் மௌலானா கருணாவை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

(கிளிநொச்சி)

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறுவ் கொவ்டேக்கும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் காலை 10.30 மணிக்கு இச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் போர்நிறுத்த உடன்பாடு, மட்டக்களப்பு விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கைக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார். இவ்வருகையின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கை அமுலாகும்

### நேற்றைய கூட்டத்தில் விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து நேற்று விரிவான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உடனடியாக அமுல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.நீதிமன்றக் கட்டடத்தில் மேல்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதிநந்தசேகரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இதில் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்.மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை, தனியார் போக்குவரத்துச் சபை, முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றின் சார்பில் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் வாக

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தேர்தல் காலத்தில்
# வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும்

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் நிறை வேற்ற வேண்டும் என எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா மாவட் டங்களைச் சேர்ந்த மாகாண சபை வேட்பாளர்கள் மத்தியில் உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரி விக்கையில், பௌத்த மதகுருக் களைத் தாக்கியும், பாராளு மன்றத்தில் குழப்பநிலையை ஏற்படுத்தியும் தனக்குரிய பொறுட் புக்களிலிருந்து அரசாங்கம் ஒதுங் கிக்கொள்ள முடியாது.

ஐக்கியதேசிய முன்னணி தொடர்ந்து பதவியில் இருந் திருந்தால் ஐக்கியதேசிய முன் னணியால் உறுதியளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டிருக்கும். அதன்படி இவ் வருடம் அனைத்து வசதிகளும் மக்களிறகுக கிட்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை நம்பி வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் வந்து கொணடிருந்தன. ஜனாதிபதி சந்திரிகா மூன்றுஅமைச்சுக்களைப் பொறுப் பேற்றதும் அவை அனைத்தும் தடைப்பட்டுவிட்டன என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

## சேமலாப நிதிவழங்கலில்
# ஆள்மாறாட்டம் குறித்து
## ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம)

ஊழியர் சேமலாப நிதி வழங் கலில் ஆள்மாறாட்டம் இடம் பெற்றது குறித்து நிதியத்துக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இது விடயம் குறித்து இது வரை எதுவிதமான நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லையென யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த கே.கருணாகரன என் பவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீதி அபிவிருததி அதிகார சபையில் தொழில்நுட்ப உததி யோகத்தராகக் கடமையாற்றிய மேற்படி நபருக்கு வழங்கப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மட்டக் களப்பைச் சேர்ந்த வேறொரு வருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது விடயம் குறித்து ஊழி யர் சேமலாப நிதியத்தின் தலை மைக்காரியாலயத்திற்குத் தெரி யப்படுத்திய போதும், இதுவரை இது குறித்து எதுவித நடவடிக் கைகளும் எடுக்கப்படவில்லை. இதையடுத்தே மேற்படி நபர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவல கத்தில் முறையிட்டுள்ளார்.

(19)

# படையினர்-புலிகள் சந்திப்பைத் தொடரக் கோருகிறது அமெரிக்கா

தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் சிறிலங்கா இராணுவத்தின ருக்கும் இடையிலான சந்திப்புக் களைத் தொடருமாறு அமெரிக்கா கோரியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் நிலை மைகளை இருதரப்புக் கும் இடையிலான பேச்சுக்கள் தடைப் படுவதற்குக் காரணியாக அமைய விடவேண்டாம் என சிறிலங்கா விற்கான அமெரிக்கத் தூதுவர் கோரியுள்ளார்.

மீணடும் யுத்தம் ஆரம்பிப்பதை இருதரப்பும் விரும்பவில்லை எனத் தொிவித்த அவர், சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேசவேண டிய அவசியத்தையும் வலியுறுத்தி யுள்ளார்.

நேரடிப் பேச்சுக்கள் மூலமே சமாதானத்தை அடையமுடியும் என்ற உண்மையை அமொிக்க அரசு சிறிலங்காவின் ஆளும்அரசு, எதிர்கட்சி மற்றும் தமிழீழ விடு தலைப் புலிகள் ஆகியோருக்கு தெளிவுபடுத் தியுள ளதாகவும் அவர் தொிவித்துள்ளார்.

(உ)

## ஊடகங்களுக்கு எதிராக மனு

(கொழும்பு)

தனக்கு எதிரான செய்திகளை வெளியிட்டமைக்காக ரூபவாஹி னிக் கூட்டுத்தாபனம் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய ஊடகங் களுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பரிஸ் வழக் குத் தாக்கல் செய்துள்ளார்.

குறிப்பிட்ட இரு நிறுவனங் களும் கடந்த 15,17ஆம் திகதி களில் தனது கீர்த்திக்குக் களங் கம் ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட்டுள்ளதாகவும் இதன் காரணமாகத் தமக்கு ஒரு மில் லியன் ரூபா நடடஈடு வழங்கப் படவேணடும் எனவும்கோரி நேற்று முன் அவர் மனுத்தாக்கல் செய் துள்ளார்.

(உ)

# படையினர் —புலிகள் சந்திப்பு தொடரும்
## க. கா. குழு தெரிவிப்பு

(மடடக்களப்பு)

மடடக்களப்பு அம்பாறை மாவட் டங்களில் இராணுவத் தினருட னான வழமையான சந்திப்புக்களை மீண்டும் ஆரம் பிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இணங்கியுள்ள தாக யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலி களின் முக்கியஸ்தர்கள் குழு வொன்று இராணுவத்தினரை யும், பொலிஸா ரையும் இன்று அக்கரைப்பற்றில் சந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவிற்கு அடைக்கலம் வழங் கியதாகக் குற்றஞ்சாட் டிய புலிகள், இராணுவத்தின ருடனான மாதாந் தச் சந்திப் புக்களில் கலந்து கொள்ள மாட்டோம் என அறிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## வடக்கு–கிழக்கின் அபிவிருத்திக்கு
# உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் போர் அனர்த் தங்களால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களைப் புனரமைத்து மக் களின் வாழ்க்கையில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் முயற்சிகளுக்காக உலகவங்கி சுமார் ஆறரைக்கோடி ரூபாவை நிதியுதவியாக வழங்கவுள்ளது.

அத்துடன் இந்நிதியின் ஒரு பகுதி 'நியாப்' என்றழைக்கப் படும் வடக்கு-கிழக்கு விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் 2 ஆவது கட்டத்தை அமுல் செய் வதற்கும் பயன்படுத் தப்படும.

கிராமப்புறங்களை புனர மைத்து அபிவிருத்தி செய்து விவசாயத் திற்கு ஊக்குவிப்பு வழங்குவதன் மூலம் வருவாய் வாய்ப்புக்களை ஏற்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் 600 கிராமங்களில் வசிக்கும் 85 ஆயிரம் குடும்பங் களைச் சேர்ந்த 4 லட்சம் பேர் நன்மை பெறவுள்ள னர்.

இதற்கான உத்தேசத்திட்டம் அடுத்த ஆண்டு ஜனவரிமாதம் முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக கப்படுகின்றது.

(60-10)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

## மிதிவெடித்தடை ஒப்பந்தம் (ஒட்டோவா உடன்படிக்கை) அமுல்படுத்தப்பட்டால்!




☆ மிதவெடியினைப் பயன்படுத்துதல், உற்பத்தி செய்தல், விருத்திசெய்தல்,பொறுப்பேற்றல், இடமாற்றம்செய்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்ய முடியாது.

☆ சேகரித்து வைக்கப்பட்ட கண்ணிகள் (மிதிவெடிகள்) நான்கு வருடங்களினுள் முற்றாக அழிக்கப்படும்.

☆ நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிகள் (மிதிவெடிகள்) 10வருடங்களினுள் அகற்றப்பட்டு அழிக்கப்படும்.

☆ கண்ணிகளினால் பாதிக்கப்பட்டோர்க்கான புனர்வாழ்வு, கண்ணிவெடி அபாயக்கல்வி, சேகரித்து வைத்திருத் தலை அழித்தல், கண்ணி வெடியகற்றல் ஆகிய செயற் பாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் தாராளமாக உதவி புரியும்.

**District Mine Action Office, Jaffna.**

(C/269)

**மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

ஒன்பதாம் திருவிழா



### புரிய வைப்பாய் தேவி

அலைகடலருகே வீற்றிருந்து
அருள் புரியும் அம்பிகையே
நிலை தடுமாறி நிம்மதியிழந்து போய்
நிற்கும் உன் அடியவர் துயர் போக்கி
சோதனைகள் இன்றி உனை வந்தடையும்
வேதனைகள் அகன்ற அந்த நாட்களை
மீண்டும் எமக்கு அருள்வாய் தாயே
நாக வீகாரை அருகே வீற்றிருந்து
அருள்புரியும் நாகபூசணித் தாயே
நாங்கள் மட்டும் ஏன் இன்னும்
அருகருகே ஆனந்தமாய் அமரமுடியவில்லை
உனை தேடிவரும் "அவர்களுக்கு"
இதை புரியவைப்பாய் தேவி

மேலைப்புலோலியூர்
நந்தன்.

### அருள் புரிவாய்

கத்தும் தரங்கம் எடுத்தெறியும்
கடல் சூழ் அழகு நயினையிலே
பக்தர்க் கருள வீற்றிருக்கும்
பரமேஸ்வரியே, பதம் பணிவார்
நித்த நிதமும் துயர் துடைத்து
நீண்டவாழ்வு அருள்பவளே!
செத்தார் எலும்பு அணிவான்றன்
திருவே! நறையே! தீந்தமிழே

பற்றிப் பிடித்தேன் நின்பாதம்
பரமன்தேவி அருள்புரிவாய்!
சிற்றம்பலத்தான் பாங்கரிலே
திகழும் திருவே அருள் புரிவாய்!
கொற்றஞ் சூழக் கொலுவிருந்து
பக்தர்க்கருளிப் பவப் பிணியை
முற்று முழுதாய் அகற்றுகின்ற
முதல்வன் தேவி அருள் புரிவாய்!

கௌரி

### காட்சியும் மாட்சியும்

அலைகடல் இரைச்சலும் அரோகரா ஓசையும்
ஆர்த்திடும் மணியின் ஒலியும்
அக்கரை நின்றுன் அருள்வளம் பெற்றிட
ஆலலார் அடியவர் பெருக்கிடும்
கலையுருத தந்தெழில் காட்டுமுன் தேரதும்
கவிந்திடு வேப்ப நிழலும்
காற்றிடை எழுந்திடு பக்தியின் பண்களும்
கசிந்திடும் மோன உணர்வும்
உலைவுறு பசீப்பிணிக் குருக்கமாய் அள்ளியே
ஊட்டிடும் அமுத சுரப்பும்
உள்ளொளிர் நாகமும் குண்டலின் சகதியும்
உருவொடு எழுந் தருளியும்
நிலையுறக் கயிலைவாகனத்திலே சிவத்துடன்
நிவந் தெழுந்திடு காட்சியும்
நினைவிலே வைத்துமே தொழுகிறோம் அருளுவாய்
நீ நா கபூஷணி அம்மையே!

எஸ். கண்ணன்

## பாராளுமன்றக் குழுக்களின் பொறுப்பை ஏற்பதென எதிர்க்கட்சிகள் தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றக் குழுக்களின் பொறுப்பினை எடுத்துக் கொள்வது என எதிர்க் கட்சிகள் தீர்மானித்துள்ளதுடன் அனைத்து எதிர் கட்சிகளும் இரு வாரங்களுக்கு ஒரு தடவை சந்திப்பது எனவும் இதன்போது பாராளுமன்ற விவகாரங்களின் நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பது என்றும் தீர்மானம் எடுக்கப்படடது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் அனைத்துக் கட்சிகளும் கூடி 2 மணிநேர கலந்துரையாடலில் மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதைவிட உயர் பதவிகளை முடிவு செய்யும் குழு, அரச நிறுவனங்கள் குழு, பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழு போன்றவற்றின் பெரும்பான்மையான அங்கத் தவர்களைப் பெற்றுக் கொள்வது இக் குழுக்களின் தலைவர் பதவிக்கு பொருத்தமானவர்களை நியமிப்பது போன்ற தீர்மானங்களும் மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

அத்துடன் பாராளுமன்றிற்கு வெளியில் இருந்து பாராளுமன்றில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான சட்டங்களை விரைவில் பாராளுமன்றிற்குள் கொண்டு வருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், அரச ஊடகங்களின் பாரபட்சத் தன்மையை நீக்குவதற்காக ஒரு திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சகல எதிர்கட்சிகளிலுமிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி உள்ளடக்கப் பட்டுள்ளார்.

ரூபவாஹினி,சுயாதீன தொலைக் காட்சி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபானம் போன்ற நிறுவனங் களுக்கு அரசியல் நியமனங்களை வழங்கியுள்ள விடயத்தை நிறுத்துவதற்கும் உரிய பிரேரரணைகளை இக்குழு முன்வைக்கவுள்ளது. ஜனநாயகத்தை ஏற்படுத்துவதறகுரிய பணிகளில் ஈடுபட சமயத்தலைவர்கள்,சமூகத்தலைவர்கள் போன்றவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்துரையாடுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-6)

## அடிமை வாழ்வின் ஆண்டுவிழாவைக் கொண்டாடுவது குறித்த போர்த்துக்கல்லின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்த 500வது ஆண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவது சம்பந்தமான போர்த்துக்கல் நாட்டின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

மேற்படி ஆண்டு விழாவை கொண்டாடுவது சம்பந்தமான விடயங்களை ஆராயவென போாத்துக்கல நாட்டின் காலோ பெண்டிய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் தேசிய பாரம்பரிய அமைச்சர் விஜிதஹேரத் துடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தினர்.

இதன்போதே மேற்படி கோரிக்கையை அமைச்சர் விஜித ஹேரத் நிராகரித்துள்ளார்.

500வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இலங்கையில் பாரிய இழப்புகள் ஏற்பட்டுள் என.

இந்த இழப்புக்கள் ஏற்பட்ட நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது பொருத்தமற்றது என அமைச்சர் விஜித ஹேரத தெரிவித்துள்ளார்.

500 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரால் அபகரித்துச் செல்லப்பட்ட கலாசாரச் சின்னங்களையும், பெறுமதி மிக்க நினைவுச் சின்னங்களையும் போர்த்துக்கல் மீண்டும் இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (உ-4,64)

## ரவி கைது முயற்சி விவகாரம்

## பொலிஸ் ஆ.குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவினை கைது செய்ய முற்பட்டமை தொடர்பாக ராஜித சேனாரத்னவினால் பொலஸ் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்கவை கைது செய்வதற்கான அனுமதியை கொழும்பு கோட்டை நீதிமன்றம் நிராகாித்துள்ளது.

கட்டடம் ஒன்றினை வாடகைக்கு விட்டமை தொடாபாக மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறி ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் வாத்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சிறிலங்கா பொலிஸார் கைது செய்ய முயன்றனா.

ஆனால் கைது செய்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாததாலும், பொதுமக்கள் காட்டிய எதிர்ப்புக் காரணமாகவும் அவரைக் கைது செய்ய முடியாமல்போயிருந்தது தெரிந்ததே.(உ)

### பொங்கல் விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று சனிக்கிழமை காலை நடைபெறுகின்றது. (52)

### பாலி நகரில் கல்விவளநிலையம் திறப்பு

(மல்லாவி)

நோர்வே நாட்டின் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் கிராமிய கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப் படும் 'ஒவ்வொரு இளைஞர் யுவதிகளையும் தொழில் சார் பயிற்சிக்கு தயார்படுத்தலும் வலுப்படுததலும்' என்ற திட்டத்தின் சேவை வள நிலையம் கடந்த புதன்கிழமை பாலிநகர், வவுனிக்குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ மாணவ அமைப்பின் நிர்வாகப் பொறுப்பளர் பாரிமகன் பாண்டியன்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணமுதன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு. பரந்தாமன ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (4)

### டெங்கினால் 37 பேர் மரணம்

(கொழும்பு)

நாடெங்கும் இதுவரை 5 ஆயிரத்து 800 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் 37 பேர் மரணமடைந்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா,கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே இந்நோயினால் பாதிக்கப்படுவோர் அதிகமாகக் காணப்படுவதுடன் கொழும்பில் மாத்திரம் ஆயிரத்து 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (உ)


### பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சேஜின் லலின் பெண் சாமினி
2,ஈச்சமோட்டை வீதி,
சுண்டிக்குளி

வழக்காளி

வழ.இல. மணநீக்கம்/377

எதிர்.
நவரெட்ணம் சேஜின் லலின்,
25/2 புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

எதிராளி

இவ்வழக்கு 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 29ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. இ.த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திரு இ. ஜெயசிங்கம் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக்கட்டளை வலம்புரிப் பத்திரிகையில் 11.7.2003ல் பிரசுரிக்கப்பட்டு எதிராளி 22.7.2003ல் மன்றில் சமுகமில்லை என்பதால் இவ் வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்திய பின்னர் மன்று வழக்காளியின் பிராது வ1 ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெற தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1995ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18ஆம் திகதி நிறைவேறிய திருமணப் பதிவை எதிராளி கடந்த 7 வருடங்களுக்கு மேலாக வழக்காளியை வன்மமாகக் கைவிட்டுச் சென்று வன்ம உறவறுப்புச் செய்த காரணமாக இத்தால் ரத்துச் செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. எதிராளி வழக்காளிக்கு நிரந்தரப்பிரமணைப் பணமாக ரூபா 50,000/= செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி தேசிய தினசரிப் பத்திரிகையான வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி இப்பின்னுறுதித தீர்வை ஏன் முற்றான தீர்வையாக்கப்படக்கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் காட்டப்பட்டிராவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3ஆம் திகதி

ஒப்பம்
இ.த.விக்னராசா
மாவட்ட நீதிபதி,
03.03.2004

வரைந்தது
சி.வீரகத்திப்பிள்ளை
வழக்காளியின் சட்டத்தரணி.

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

நீதிமன்றின் கட்டளைப்படி

(8622)

# குடும்பத்தை நடுவீதிக்குக் கொண்டுவரும் போதைப் பொருள் எமக்குத் தேவைதானா?

**போதைப் பொருள் எதிர்ப்பு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

மனிதனை வறுமை நிலைக்குத் தள்ளி குடும்பங்களை நடுவீதிக்குக் கொண்டுவரும் போதைப்பொருட்கள் எமக்கு அவசியம் தேவைதானா என்று மனிதர்களாகிய நாங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமானால் எந்தவேளையிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் போதைப் பொருளைத் தொடமாட்டோம்.

முதலில் போதைப் பொருள் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். குடாநாட்டைப் பொறுத்தமட்டில் கள்ளு, சாராயம், கசிப்புக் கூடுதலாக உள்ளது. இதேபோல் கொழும்பைப பொறுத்தமட்டில் விஸ்கி, பிறண்டி, கஞ்சா, அபின, ஹெரோயின் போன்றவை கூடுதலாகக் காணப்படுகின்றது.

இந்தப் போதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள் கெட்டு சீரழிந்து போவார்கள் என்பது உலகம் அறிந்த விடயம். இதனால் உளநலம் பாதிப்படையும, நரம்பு மண்டலங்கள் பாதிபபடையும், குருதி அமுக்கம் அதிகரித்து இதயம் கூடிய கெதியில் பாதிப்படையும், ஈரல் பாதிப்படையும், மூளை பாதிப்படையும் ஈற்றில் பயம், சந்தேகம், துக்கம், மனவிரக்தி ஏற்பட்டுத் தற்கொலைக்கே கொண்டு வந்துவிடும். மேலும் போதைப் பொருளுக்கு அடிமையானவன் காலப்போக்கில் மனநோயாளியாகின்றான்.

போதைப் பொருட்களின் மீது வருப்பம் கொண்டு அதனைப பாவிப்பதே நம் நித்திய நடத்தையாகக் கொண்டுவிட்டவர்கள் பெரிய அரச பதவியில் இருந்தாலும் அவர்களின் பகைவர்கள் அவர்களைக் கண்டு அஞ்சமாட்டார்கள். அத்துடன் அவர்கள் தமது பாரம்பரியமாகக் குலவழி வந்த புகழையும் இழப்பார்களாம் என்பது திருவள்ளுவரின் குறளாகும். மதுவானது ஒருவனைக் கொலைகாரனாக்கும், திருடனாக்கும், பசியோடிருக்கும் குழந்தையைப் பார்க்கமாட்டாது சிறைச் சாலைக்குச் செல்லச் செய்யும். தாலிகட்டிய மனைவியைத் துன்புறுத்தும். உற்றார், உறவினர்களை மற்றும் தாய், தந்தையர்களை மதிக்காது மேலும நேரத்தையும் பணத்தையும் மதுபானத்திலே செலவழிப்பவர்கள் எவராவது செழிப்பைக் காணுகிறார்களா? ஆனால் மதுபானக் கடைக்காரர்களும், கசிப்புத் தயாரிப்பவர்களும் சிறப்படைகின்றார்கள்.

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

நோயற்ற வாழ்வே உலகின் உயர்வான சுகம் என்பது புத்த

**செ.குமாரசிங்கம் J.P.**
**செயலாளர்**
**வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.**

பகவானின் அறிவுரை. ஆனால், நாம் இந்த அறிவுரையை மதிக்கின்றோமா? இல்லவே இல்லை. போதைப்பொருள் பாவனையாளர் உலகெங்கும் பல இலட்சம்பேர் உள்ளனர். மேலும் பேரதைப் பொருள் பாவனையால் ஒரு கோடி மக்கள் வருடம் தோறும் நோய்வாய்ப்பட்டு மரணிக்கின்றார்கள் என்று புள்ளிவிபரம் எடுத்துக் கூறுகின்றது. உலகில் போதைப் பொருள் பாவனையில் முதலாம் இடம் பிரான்ஸ் பிடித்துள்ளது. எமது நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. அநேகமாக 25- 45 வயதிற்கு உட்பட்டவர்கள் தான் போதைப பொருளுக்கு அடிமையாகின்றார்கள். இலங்கையில் ஹெரோயினுக்கு அடிமையாகிறவர்களின் தொகை ஒரு இலட்சத்தையும் தாண்டிவிட்டது. மேலும போதைப பொருளுக்கு நாளொன்றுக்கு ரூபா 500/= செலவு செய்கின்றார்களாம். இதனால் இலங்கையில் போதைப் பொருள பாவனைக்கு நாளொன்றுக்கு ரூபா 5 கோடி செலவு ஏற்படுகின்றது.

குடிநோயால் ஆண்களில் 25 சதவீதத்தினர் தொடக்கம் 45 சதவீதம் வரையும், பெண்களில் 5 சதவீதம் தொடக்கம் 8 சதவீதம் வரை வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள். மேலும் விலைமாதர்களில் 80 சதவீதத்தினர் குடிப்பவர்கள் என்று புள்ளிவிபரம் எடுத்துக் கூறுகின்றது. எனவே இறைவன் வாழும் ஆலயமாகிய இந்த மனித உடல் இன்று குடியால் சல்லடைபோடுகின்றது. மேலும், மது புலனைப் பறிக்கும், நலனைப் பறிக்கும, நோயை வளர்க்கும் ஈற்றில் உயிரைக் குடிக்கும். மனிதன் அருந்தும் மதுவில் அற்ககோலில் 10 சதவீதம் தான் சுவாசிப்பது மூலமும் சிறுநீர் மூலமும் வியர்வை மூலமும் வெளியேறுகின்றது. மிகுதி 90 சதவீதமும் இரத்தத்துடன் சங்கமமாகின்றது. மேலும், கருவுற்றுள்ள பெண்கள் 3 மாத கால இடைவெளியில் மது அருந்தினால் உடல், உள ஊன முற்ற பிள்ளைகள் பிறக்கும்.

### ஒரு மனிதன் மதுவுக்கு அடிமையாவதற்கான காரணங்கள்

1. சூழலைப் பொறுத்தது - உதாரணமாகத தந்தை எவ் வழியோ தனயனும் அவ்வழி என்பதற்கிணங்க குடிகாரத் தந்தை எதன் மகனுக்கும் வழி காட்டுகின்றான்.
2. உளவியல் ரீதியாக தாழ்வு மனப்பான்மை.
3. சமூகப் பிரச்சினைகள்.
4. திருமணம்.
5. பாலியல் ரீதியான பிரச்சினைகள்.
6. பண நெருக்கடி.
7. சட்டவிரோத செயல்களால், கொலை, குற்றங்கள்.

### மதுவை சடுதியாக நிறுத்தினால் ஏற்படும் வியாதிகள்

01. மிகையாக வியர்த்தல்.
02. நடுக்கம்.
03. வாந்தி.
04. நெஞ்சு படபடப்பு.
05. உயர் குருதி அழுத்தம்
06. தலைவலி
07. சோர்வு, களைப்பு
08. வலிப்பு
09. பார்வை குறைவு, செவிப் புலன் மற்றும் பிரமை ஏற்படும்.

எனவே, புலியின் வாலைப் பிடிக்கும்பொழுதும் பயம் என்பார்கள். புலிவாலை விட்டா லும் பயம் என்பார்கள். இதே போல் குடித்தாலும் வருத்தம், குடியை விட்டாலும் வருத்தம் தான். எனவே, மது பற்றி நாம் எல்லோரும் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டும். விழிப் பற்று இருப்போமாயின் மர ணத்தை விரைவாக வரவழைப்போம்.

எனவே, மது நோய்க்கு சிகிச்சை உண்டா என்று கேட்டால் சிகிச்சை உண்டு. முதலில் மதுவில் இருந்து விடுபட வேண்டும். இதனால் ஏற்படும் அறிகுறிள சிகிச்சை நிலையங்களை நாடுதல். உடல்நோய் அறிகுறிகள் ஏற்படின் அதற்கான சிகிச்சை, மது பாவிக்காமல் இருப்பதற்கான ஆலோசனைகளைப் பெறுதல், ஈற்றில் உளவள சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளல். எனவே, நமது ஈழமண்ணில் நல்லதொரு சமுதாயம் உருவாவதற்குப் போதைப் பொருள் பாவனையைத் தவிர்த்துக் குடும்ப நலனை நிலைநாட்டுவோம் என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றது. ⊘

## கிளிநொச்சியில் தலைமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கல்வியகம் பிறந்றிக் ஈபேட் மன்றமும் இலங்கைத தமிழ் ஆசிரியர் சங்கமும் நாடாத்தும் தொழிற் சங்கத் தலைமைத்துவக் கருத்தரங்கு ஒன்று இன்றும் நாளையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்கள் கலந்துகொள்ளும் இக்கலந்துரையாடலில் வள ஆளணியினராக தமிழ் ஆசிரியசங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் மற்றும் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், தீவகக் கல்வி வலயத் தலைவர் பொ.அருணகிரிநாதர், மகளிர் அமைப்புத் தலைவி திருமதி இ.ஜே.மகேந்திரா ஆகியோர் கலந்துகொள்ளவுளளனா். (4,19)

## முன்பள்ளி கண் காட்சி

(பருத்தித்துறை)

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களின் முன்பள்ளிக் கண்காட்சி இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரீ.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப விழாவிலே யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இவ்விழாவிலே யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா, தமிழர் புனர்வாழ்வு கழகப் பணிப்பாளர் கே.ஜெயராஜ், யாழ்.மேலதிக அரச அதிபர் ஏ.சிவசாமி, வடக்கு- கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலைய ஒருங்கிணைப்பாளர் கே.கணேசலிங்கம், யாழ்.மாவட்ட தலைவர் எஸ்.சிவநேசன், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆர்.தயா, உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவருத்தி உத்தியோகத்தர்களான எஸ். இராமச்சந்திரா, திருமதி. எஸ். சந்திராதேவி, வி.சுப்பிரமணியம், பரு.முன் பள்ளி ஆசிரி யர், சங்க ஆலோசகர் எஸ்.திருச்செல்வம், அதி பர் எஸ்.சேதுராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக் கலந்து கொள்ளவுள்ளனர். (4,52)

## 23 ஆயிரம் நல்லினத் தென்னைகளை விநியோகிக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

யாழ்.கமநல சேவைத் திணைக்களம், கமநல சேவை நிலையங்களுக்கூடாகத் தென்னை வளர்ப்போருக்கு 23 ஆயிரம் நல்லினத் தென்னங்கன்று களைக் குறைந்த விலையில் வழங்கவுள்ளது.

இதற்கென வருவிக்கப்பட்ட 23 ஆயிரம் நல்லின தேங்காய் களைக் கொண்ட தென்னம் நாற்று மேடை கமநல சேவை நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளது. புத்தூர், புலோலி, உரும்பிராய், தொல்புரம், கைதடி, சாவகச்சேரி, நல்லூர், கீரிமலை கமநல சேவை நிலையங்களிலேயே இத்தென்னம் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நாற்று மேடைகளில் இருந்து பெறப்படும் நல்லின தென்னங் கன்றுகள் ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் தென்னை வளர்ப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (உ-52)

## பரு. வைத்தியசாலையில் ஆய்வுகூட மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் ஆய்வுகூட மருந்து வகைளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்காகச் செல்லும் நோயாளர்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். எனவே இவ் ஆய்வு கூடத்திற்குத் தேவை யான மருந்து வகைகளை உடனடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு நோயாளர்கள் சுகாதாரத் திணைக்களத்திற்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (52)

## கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாய உபகரணங்கள் விநியோகம்

(பருத்தித்துறை)

நிக்கொட் நிறுவனம் யாழ். கமநலசேவைத் திணைக்களத்திற்கு விவசாய உபகரணங்களை வழங்கியுள்ளது.

இவ்விவசாய உபகரணங்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கமலநலச் சேவை நிலையங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இரு சில்லு உழவு இயந்திரங்கள் - 7, நீரிறைக்கும் இயந்திரம் - 120, தெளிகருவி - 100, விசைதெளி கருவி - 12, அருவி வெட்டும் இயந்திரம் -12 ஆகியவையே இவ்விதம் வழங்கப்படவுள்ளன. (உ-52)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைச் சாடுகிறார் ரணில்

(கொழும்பு)

தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குள்ளேயே இன்னொரு அரசாங்கம் இயங்கி வருவதாக முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சாடியுள்ளார்.



நேற்று முன்தினம் காலியில் இடம்பெற்ற மாகாண சபைத்தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிரேஷ்ட அமைச்சர்களுக்குத் தெரியாத விடயங்கள் குறித்துப் பிரதியமைச்சர்கள் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கி வருகின்றனர். கனிஷ்ட நிலைப் பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரிந்த விடயங்கள் சிரேஷ்ட நிலை அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கின்றன.

பொலிஸ் அதிபருக்குத் தெரிந்திருக்காத நிலையில், பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராய்ச்சி எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவைக் கைது செய நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டமை, அரச ஊடகத்துக்குத் தெரிவித்திருந்தமை தொடர்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கருத்து எதனையும் கூறவில்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார். (உ-121)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணி நீர்வேலி கந்தசுவாமி கோவில சனசமூக நிலையத் தில் இடம் பெறவுள்ளது. (ச)

## பதவிக்காலம் நீடிப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.கனகரத்தினத்திற்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சேவை நீடிப்பு சம்பந்தமாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கடந்த 18ஆம் திகதி யாழ்.செயலகத்திற்குக் கிடைத்துள்ளது.

கடந்த சித்திரை மாதம் 23 ஆம் திகதியுடன் இவரது 58 ஆவது வருட சேவை பூர்த்தியடைந்திருந்தது. ஆனால், இவரது சேவை நீடிப்புக் கடிதம் கடந்த 18ஆம் திகதி யாழ்.செயலகத்திற்குக் கிடைத்தது. (4,52)

## பெறுபேற்று சான்றிதழை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான யாழ்.பல்கலைக்கழக 2000 ஆம் கல்வியாண்டு கலைமாமணி பகுதி I வெளிவாரிப் பாட்சை முடிவுகளை விளம்பரப் பலகையில் பார்வையிட லாம் எனவும், பெறுபேற்றுச் சான்றிதழ்களை எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கார்க்கில் போரில் தலையிடுமாறு அமெரிக்காவைக் கோரியதாம் பாக்.

## "மை லைஃப்" இல் உண்மையை உடைக்கிறார் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்டன்

(வோஷிங்டன்)

**இந்தியா- பாகிஸ்தான் இடையே நடந்த கார்கில் போரின் உச்சக்கட்டத்தில்,அமெரிக்கா தலையிடவேண்டும் என பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீஸ் என்னை வலியுறுத்தினார்.**

**ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை இந்தியா விரும்பாத நிலையில் அமெரிக்கா தலையிடாது என திட்டவட்டமாகக் கூறிவிட்டேன் என அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில் கிளிங்டன் கூறியுள்ளார்.**

அமெரிக்க முன்னாள் அதிபர் கிளிங்டன், தனது வாழ்க்கையில் நடந்த மொனிக்கா லெவின்ஸ்கி விவகாரம் உள்ளிட்ட முக்கிய நிகழ்ச்சிகளை மை லைஃப் என்ற பெயரில் சுயசரிதையாக எழுதியுள்ளார்.

அதில் கார்க்கில் போர் பற்றி அவர் கூறியிருப்பதாவது.

இந்தியப் பகுதிக்குள் பாகிஸ்தான் படைகள் புகுந்துள்ள நிலையில் அவற்றை விரட்ட இந்தியப்படைகள் தீவிர தாக்குதலில் ஈடுபட்டிருந்த நேரம் அது .

அப்போது பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் பிரச்சினையில் தலையிட்டு சமரசம் செய்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

### விவாதத்திற்கு அழைப்பு

அமெரிக்க சுதந்திர தினமான யூலை 4 ஆம் திகதி வாஷிங்டன் வருவதாகவும் இந்தியா- பாகிஸ்தான் இடையே கார்கிலில் நடந்துவரும் போர் குறித்து விவாதிக்கலாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வாஷிங்டன் வரலாம். ஆனால் அமெரிக்க சுதந்திரதின



நாளில் உங்களுடன் விவாதிக்க வேண்டுமானால் முதலில் எல்லை தாண்டியுள்ள பாகிஸ்தான் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும்.

அடுத்ததாக ,காஷ்மீர் பிரச்சினையில் நான் தலையிடமாட்டேன். அப்படிச்செய்தால் அத்துமீறி, இந்திய எல்லைக்குள் உங்கள் படைகள் புகுந்த செயலை நியாயப்படுத்தியதாக ஆகிவிடும் எனக் கூறிவிட்டேன்.

நவாஸ் ஷெரீப் குழப்பமான நிலையில் இருந்தார்.சில மாதங்களுக்கு முன்புதான் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இருதரப்பு அமைதிப் பேச்சுவார்த்தைக்காக லாகூருக்கு பஸ் பயணம் மேற்கொண்டிருந்தார். ஆனால் பாகிஸ்தான் படைகள் இந்தியாவுக்குள் நுழைந்ததையடுத்து பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. அமெரிக்கா தலையிடவேண்டும் என்பதற்காக அவர்தான் படைகளுக்கு உத்தரவிட்டாரா அல்லது அவருக்கே தெரியாமல் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவுக்குள் வந்துவிட்ட நிலையில் இராணுவத்தை பகைத்துக் கொள்ளப் பயந்தாரா என எனக்குத் தெரியாது. இந்தியாவும் எல்லையில் படைகளைக் குவித்ததும் பிரச்சினைகள் பெரிதாவதை அவர் உணர்ந்தார். என்னுடைய பெயரைப் பயன்படுத்தி பிரச்சினையில் இருந்து வெளிவர விரும்பினார்.

### பிரச்சினையில் தலையிடுக!

கார்கில் பிரச்சினை பெரிதாவதற்கு முன்பே ஒருமுறை அவர் காஷ்மீர் பிரச்சினையில் தலையிடுமபடி கேட்டுக் கொண்டார். மத்திய கிழக்கு நாடுகள் விடயத்திலும் வட அயர்லாந்து விவகாரத்திலும் அமெரிக்கா தலையிட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இரு தரப்பும் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடவேண்டும் எனக் கேட்டுக் கொண்டால் மட்டுமேஅமெரிக்கா தலையிடும் என்றும் காஷ்மீர் விவகாரத்தில் எந்த மூன்றாவது நாட்டின் தலையீட்டையும் இந்தியா விரும்பவில்லை என்றும் அவருக்கு விளக்கிக் கூறினேன்.

வாஷிங்டனில் யூலை 4ஆம் திகதி நடந்த பேச்சுவார்த்தையின்போது காஷ்மீர் பிரச்சினையில் தலையிடும்படி மீண்டும் ஒரு முறை என்னிடம்கேட்டுக்கொண்டார். இந்தியாவின் சம்மதம் இல்லாமல் தலையிடமாட்டோம் என உறுதியாகக் கூறிவிட்டேன். வேண்டுமானால் படைகளை வாபஸ் பெறுங்கள். இந்தியப்பிரதமர் வாஜ்பாயிடம் பேசி மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடரும்படி வலியுறுத்துகிறேன் என்றேன்.

படைகளை வாபஸ் பெறும் முடிவை எடுக்க இராணுவத்திற்குப் பயந்து கொண்டு என்னைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நவாஸ் நினைத்திருக்கலாம் என கிலிங்டன் தனது சுயசரிதையில் எழுதியுள்ளார். (உ)

## WORLD NEWS உலக தரிசனம்

## போர்க்குற்ற விசாரணையில் இருந்து அமெ.வீரர்கள் விடுவிக்கப்படார்

(வாஷிங்டன்)

போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்ற விசாரணையில் இருந்து அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு விலக்களிக்க ஐ.நா பாதுகாப்பு மன்றம் மறுத்து விட்டது.இது தொடர்பான பாதுகாப்பு மன்றத்தில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. ஈராக் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் துன்புறுத்தப்படுவதால் இத் தீர்மானத்தை ஏற்க பாதுகாப்பு மன்றத்தில் உறுப்பு நாடுகள் பல அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன.


தர்ம சங்கடமான இந் நிலையில் அத்தீர்மானத்தை நிறைவேற்றுமாறு வலியுறுத்தப்போவதில்லை என்று ஐ.நா பாதுகாப்பு மன்றத்திற்கான அமெரிக்காவின் துணைத் தூதர் ஜேம்ஸ், கன்னிங்காம் கூறியுள்ளார்.

மிகவும்மோசமான முறையில் விசாரணை நடத்தப்படும் என்ற காரணத்திற்காக இரு ஆண்டுகளுக்கு அமெரிக்க இரணுவத்தினருக்கு சிறப்பு அந்தஸ்து பெறப்பட்டிருந்தது.

அமெரிக்கா கொண்டுவந்த இத் தீர்மானம் நிறைவேற வேண்டுமெனின் ஒன்பது வாக்குகள் பெறவேண்டும்.இந்த அளவில் ஆதரவைப் பெற அமெரிக்காவினால் முடியவில்லை. அமெரிக்காவின் தீர்மானத்திற்கு பாதுகாப்புச் சபையில் இடம் பெற்றுள்ள எத்தனை உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்தன எனத் தெரியவில்லை. எனினும் இத் தீர்மானத்திற்கு "அமெரிக்கா உட்பட ஐந்து நாடுகள் மட்டுமே வாக்களித்திருக்க முடியும்.

சில உறுப்பு நாடுகள் ஐ.நா தீர்மானம் வாக்குக்கு விடப்பட்ட போது சில நாடுகள் அதில் பங்கேற்கவில்லை. அமெரிக்கா கொண்டுவந்த இத்தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று முன்னாள் ஐ.நா. தலைமைச் செயலர் கோபி அன்னான் கூறியிருந்தார். (உ)

**இந்தோனேஷியாவில் தற்போதுள்ள பஜாஜ் டாக்சிகளுக்குப் பதிலாக அதி நவீன டாக்சிகளை அறிமுகம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அரசு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ள புதிய டாக்சியின் விலை ஏழு மடங்கு அதிகமாகும். இதனால் அதனை எதிர்த்து டாக்சி ஓட்டுநனர்கள் ஜகர்த்தாவில் ஆளுநர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம்**



## தங்குதடையின்றி படைகள் அனுப்பப்படும்

(சியோல்)

ஈராக்கிற்குத் தனது படைகளைத் தென்கொரியா தொடர்ந்து அனுப்பும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவைச் சேர்ந்த ஒருவர் முஸ்லிம் பயங்கரவாதிகளால் தலை துண்டிக்கப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் துருப்புகள் அனுப்பும் பணியைப் பாதிக்காது என்றும் வெள்ளை மாளிகையில் ஹங்கேரி பிரதமர் பீட்டர் மெட்கி யீசியை செவ்வாய்க்கிழமை சந்தித்த பிறகு புஷ் கூறியுள்ளார். (உ)



**இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் ஆபூர்வ வகையைச் சேர்ந்த 2 புலிக்குட்டிகள் பிறந்தன. அதில் ஒன்று இறந்து விட்டது. இதனால் மற்றொரு குட்டி மிகவும் கவனமாக வளர்க்கப்படுகிறது. பிறந்து 52 நாட்களான இந்த குட்டிக்கு குஷி என்று பெயரிட்டுள்ளனர்.**

## மனோதிடத்துடன் இருப்பதாக சதாம் மகளுக்குக் கடிதம்

(வாஷிங்டன்)

நல்ல மனோதிடத்துடன் இருக்கின்றேன் அதற்காக கடவுளுக்கு நன்றி சொல்கிறேன் என்று மகள்களில் ஒருவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் சதாம் அனுப்பிய மூன்றில் இரண்டு பங்குக் கடிதங்கள் மறைக்கப்பட்டு விட்டதாக நியூஸ்வீக் பத்திரிகை கூறியுள்ளது.

அதற்கிடையில் அமெரிக்க இராணுவத்தால் சதாம் மிகவும் மோசமாக நடத்தப்படுகிறார்.


அவரது உடலில் புதிய காயங்கள் பல உள்ளன என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு சதாமின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். (உ)

# மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவோம்

## தொலைக்காட்சி மூலம் மக்களுக்கு பிரதமர் ஆற்றிய உரை

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி சமூக, அரசியல் நிலைப்புத் தன்மை மற்றும் மத நல்லிணகத்தை உறுதி

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மனித நேயத்துடன் செயற்படுத்தப்படுமெனத் தெரிவித்த பிரதமர், பொருளாதாரச் சீர்திருத்த



பிரதமர் பதவியேற்ற பின் மன்மோகன் சிங் முதல் முறையாக நாட்டு மக்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சியில் உரையாற்றினார். எட்டுப் பக்கங்கள் அடங்கிய அவரது உரையில் பொருளாதார வளர்ச்சி மூலம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். வறுமையை ஒழித்து நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறினார்.

செய்யும் வகையில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு உறுதி கொண்டுள்ளது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன் தினம் தொலைக்காட்சி மூலம் மக்களுக்கு உரையாற்றிய அவர், மக்களனைவரும் சுயமரியாதையுடன் கௌரவமான முறையில் வாழ்வதற்குக் கொள்கைகளும் திட்டங்களும் கொண்டு வரப்படுமென்றார்.

பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், நலிவடைந்த மக்கள் மற்றும் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது என்று பிரதமர் கூறினார்.

மென்பது அதிகாரவர்க்கத்தின்பிடியிலிருந்து தனியார் தொழில் நிறுவனங்களை விடுவிப்பது மட்டுமல்ல, அரசைத் திறமையாகச் செயற்பட வைப்பதும் இதில் அடங்குமென்றார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையில் ஆட்சியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, வேளாண்துறைக்கு முன்னுரிமை அளிக்குமென்றும், இந்தத் துறையில் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கும் வகையில் தனியார் மற்றும் அரசு முதலீட்டை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்படுமென்றும் கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளில் விவசாயிகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறிய பிரதமர், இதனால் வேளாண் உற்பத்தி கணிசமாகக் குறைந்தது என்று குறிப்பிட்டார்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக வேளாண் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வேளாண் விரிவாக்கற் பணிகளில் அதிக கவனம் செலுத்தப்படுமென்றும், வேளாண் துறையில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், வேலைக்கு உணவு திட்டத்தை மத்திய அரசு திறம்பட மேம்படுத்தும் என்றும் விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் அவர்கள் விளை பொருட்களைச் சில இடங்களுக்கு [illegible] தடை [illegible] தெரிவித்தார்.

நாட்டில் [illegible] மாகக் காணப்படுவது [illegible] வித்த பிரதமர், ஆண்களோடு ஒப்பிடுகையில் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் உணவு ஆகியவை பெண்களுக்குச் சற்றுக் குறைவாகவே கிடைப்பதாகவும் இந்த நிலை மாறவேண்டும் என்றும், [illegible] சமுதாயப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் சமுதாயத்தின் பொறுப்பு என்றும் பிரதமர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் உரை மீதான விவாதம் நடைபெறுவதை எதிர்க்கட்சிகள் தடுத்தது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த பிரதமர், மக்களின் பிரச்சினைகளுக்காகப் பொது விவாதம் நடைபெறும் இந்த மன்றத்துக்கு அரசியற் கட்சிகள் மதிப்பளிக்க வேண்டுமென்றார்.

அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்த மாட்டோம் என்ற கொள்கையுடன் நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான அளவு அணு ஆயுதங்களை இந்தியா வைத்திருக்குமென்று பிரதமர் தெரிவித்தார்.

இந்தியா பொறுப்புள்ள அணு ஆயுத நாடு என்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பெருகுவதைத் தடுக்க, இந்தியா தொடர்ந்து பாடுபடுமென்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்வனவு சீரமைக்கப்படுமென்று தெரிவித்த அவர் இதன் மூலம் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆயுதங்கள் கிடைக்க வழி ஏற்படுமென்றார்.

காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண பாகிஸ்தானுடன் ஆக்க பூர்வமான பேச்சுக்களை இந்தியா நடத்தும் என்றார்.

அதே நேரம், இந்த நடவடிக்கைகளுக்கு எல்லை தாண்டிய பயங்கரவாதமும் வன்முறைகளும் பின்னடைவை ஏற்படுத்திவிடக் கூடாது என்று பிரதமர் எச்சரித்தார். (து)



மறைந்த கவியரசு கண்ணதாசனின் 78ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. சென்னையில் உள்ள கண்ணதாசன் திருவுருவச்சிலைக்கு தமிழக அமைச்சர்களும் கலைத் துறையினரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## அரச இயந்திரம் உடைந்து விட்டதா?

## டாக்டர் ராமதாஸ் கேள்வி

(சென்னை)

தமிழக அரசின் அண்மைக் கால நடவடிக்கைகள் அரசு இயந்திரம் உடைந்து அனைத்துத் துறைகளும் ஸ்தம்பித்துள்ளதைக் காட்டுகிறது என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறார்.

அவர், வெளியிட்ட அறிக்கையில் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் மாற்றப்படுவது மாதாந்தர நிகழ்வுகள் ஆகிவிட்டன என்று கூறியுள்ளார்.

முதல் நாளில் தற்காலிக ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து மறுநாளில் அதைத் திருப்பப் பெற்றிருப்பது வரும் சட்டப் பேரவைத் தேர்தல் பயத்தில் அரசு உள்ளது என்பது தெளிவாகிறது என ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார். (து)

# இந்தியச் செய்திகள்

## சிதம்பரம், இளங்கோவனுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபணை மனு

(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தலின் போது வேட்பு மனுக்களில் பொய்யான தகவல்களைத் தந்ததாக மத்திய நிதியமைச்சர் சிதம்பரம், இணையமைச்சர் இளங்கோவன் ஆகியவர்களின் தேர்தல் செல்லாது என அறிவிக்கக் கோரிச் சென்னை உயர் நீதிமன்றத்தில் சிவகாசித் தொகுதியில் சிதம்பரத்தை எதிர்த்துப் - போட்டியிட்ட அ.தி.மு.க.வேட்பாளர் சுப. கறுப்பையாவும், கோபிசெட்டிப்பாளயத்தில் இளங்கோவனை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் என்.ஆர். கோவிந்தராஜனும் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த இரண்டு மனுக்களும் சென்னை உயர் நீதி மன்றத்தில் விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (து)


## 174 கோடி ரூபா செலவில் வேட்டி, சேலை தயாரிப்பு

(காஞ்சிபுரம்)

தமிழ் நாட்டில் பொங்கல் பண்டிகையையொட்டி ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்படும் வேட்டி, சேலை தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது என்று மாநில கைத்தறித்துறை அமைச்சர் சோமசுந்தரம் கூறியிருக்கிறார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் 174 கோடி ரூபா செலவில் 2 கோடியே 22 இலட்சம் இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவித்தார்.

வேட்டி, சேலை தயாரிப்புப் பணி மூலம் 25 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள், 25 ஆயிரம் விசைத்தறி நெசவாளர்கள் உட்பட சுமார் 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது என அவர் தெரிவித்தார். (து)




## 8ஆயிரம் கோடி ரூபா செலவில் உயர் தொழில்நுட்பப் பூங்கா

(சென்னை)

8ஆயிரம் கோடி ரூபா செலவில் நாங்குனேரியில் உயர் தொழில் நுட்பப்பூங்கா அமைக்கும் திட்டம் விரைவாக நிறைவேற்றப்படுமென்று மத்திய வர்த்தக, மற்றும் தொழில் அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறியிருக்கிறார்.

மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் அடிக்கல் நாட்டிய இந்தத் திட்டம் எப்படியும் நிறைவேற்றப்படுமென்று அவர் உறுதியளித்தார்.

நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமையவிருக்கும் இடத்தைப் பார்வையிட்டதன் பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சகல தரப்புடனும் இணைந்து மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமென்றும் இதன் மூலம் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமென்றும் இளங்கோவன் கூறினார்.

இந்தத் திட்டத்துக்குப் போதிய [illegible] சிதம்பரத்திடம் வலியுறுத்த விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 12 அமைச்சர்களும் தமிழகத்தின் தொழில் மேம்பாட்டுக் காகப்பாடுபடுவோம் என்றும் அவர் கூறினார். (து)

## மக்களவைத் தேர்தலின் பின் ஜெயலலிதாவின் அறிவிப்புகள்

(சென்னை)

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலையடுத்து தமிழக முதலமைச்சர் 25 திடுக்கிடும் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்.

கட்டாய மதமாற்றச் சட்டத்தை ரத்து செய்து அவர் வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, பணிநீக்கம் செய்யப்பட்ட 15 ஆயிரம் தற்காலிகப் பணியாளர்களுக்கு வேலை வழங்கியது வரை அவரது அறிவிப்புகள் 25 ஐ எட்டியுள்ளது.

மக்களவைத் தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வி, வரப்போகும் சட்டப் பேரவைத் தொகுதித் தேர்தல் பற்றிய அச்ச உணர்வு ஆகியவை காரணமாகவே அவர் முன்னுக்குப் பின் முரணாக அடிக்கடி அறிவிப்புக்களை வெளியிட்டு வருவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (து)

# சைவமக்கள் பேணவேண்டிய அரிய பொக்கிஷம்
# ஆத்மஜோதி நா.முத்தையாவின் 'ஈழத்துச் சித்தர்கள்'

சித்தர்களும் முத்தர்களும் வாழ்ந்த சிவபூமி இலங்கையாகும். காலத்துக்குக் காலம் பல சிவபக்




தர்கள் சித்தர்களாகி வாழ்ந்து எங்களுக்கெல்லாம் வழிகாட்டியுள்ளனர். இவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை குறிப்பாக இறை பக்திகளை, அவை மூலம் ஏற்பட்ட சித்துகளை தொகுத்தும், வகுத்தும் நூலாக்கிய பெருமை வணக்கத்குரிய ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களையே சாரும்.

**நூல்:- ஈழத்துச் சித்தர்கள்**
**ஆசிரியர்:- ஆத்மஜோதி. நா.முத்தையா வெளியீடு:- ஆத்மஜோதியான மணிமண்டபம் ஏழாலை விலை :- 100/=**

அந்த நூல்தான் "ஈழத்துச் சித்தர்கள்'' என்பதாகும். இந் நூலினை ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தினர் மூன்றாவது பதிப்பாக வெளியிட்டுள்ளனர். முதல் இரண்டு பதிப்புகளிலும் 16 சித்தர்களைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்தது. மூன்றாவது பதிப்பில் பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய சிவசண்முகவடிவேல் அவர்களை சேர்த்துள்ளார்கள்.

இந் நூலின் முதலாவது பதிப்பின் மதிப்புரையில் பேராசியர் க.கைலாயபதி குறிப்பிடுகையில்,

''சித்தர்பரம்பரை ஒன்று இலங்கையிலும் இருந்து வந்திருக்கிறது. பொது சமூக வாழ்விலிருந்து இவர்கள் விலகியிருந்தமையால் ஏட்டிலும் இலக்கியத்திலும் இடம் பெறாது போயினர். செவிவழிச் செய்திகளாகக் கடந்த இரண்டு,

## திறனாய்வுக்களம்

மூன்று நூற்றாண்டுகளிலே ஒரு சிலரைப் பற்றியே இன்று அறிய முடிகிறது. சிறப்பாக கடையிற் சுவாமிகள், யோகர்சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், செல்லாச்சி அம்மையார், மகாதேவ சுவாமிகள், தாளாயன் சுவாமிகள் உட்பட ஈழத்துச் சித்தர்களை ஆசியர் இந்நூலில் அறிமுகப் படுத்தியுள்ளார்.

இந்தியா போன்று இலங்கையிலும் சித்தர்கள் வழிவழியாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை ஆத்மஜோதியின் ஈழத்துச்சித்தர்கள் நூல் எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த முதல் சித்தர் கடையிற் சுவாமிகள் இவரிலிருந்தே ஈழத்துச் சித்தர் பரம்பரை தொடங்குவதாகச் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு சித்தர்களும் வாழ்ந்த காலம், நிகழ்வுகள், செய்த சித்துக்கள் போன்றவற்றை செவி வழியால் வந்தவற்றைக் கொண்டும் தகவல்கள் ஏட்டுச்சுவடிகளை ஆதாரமாகக் கொண்டும் ஆராய்ச்சிகள் என்பவற்றைக்கொண்டும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார் ஆத்மஜோதி முத்தையா.

எளிய தமிழ் நடையில் உண்மைக்குப்புறம்பில்லாமல் சித்தர்களின் பெருமைகளைக் கூறும் நூலாகத் தந்துள்ளார் ஆத்மஜோதி.

இந் நூலினைப் படிப்பவர்கள் இப்படியும் தமிழ் சித்தர்கள் வாழ்ந்துள்ளார்களா என்னும் அளவிற்கு

**தூனா**

ஆச்சரியப்படும் படியாக சித்தர் வரலாற்று நூலாகத்தந்துள்ளார்.

ஒவ்வொரு சைவத் தமிழர் வீடுகளிலும் பேணப்படவேண்டிய அரிய பொக்கிஷம் இந்த ஈழத்துச் சித்தர் நூலாகும்.

காலத்தால் அழியாது இந் நூலைக் காப்பது சைவ உலகின் பெரும் கடனாகும். ☒

## தமிழீழ நிதித்துறை அதிரடி நடவடிக்கை
## காலாவதியான பொருட்கள்
## கைப்பற்றப்பட்டு தீமூட்டி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் வர்த்தக நிலையங்களில் இருந்து பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டு தீ மூட்டி அழிக்கப்பட்டன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், தமிழீழ நிதித்துறையின் தர நிர்ணயக் குழு இந்த அதிரடி நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டது. அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, நவாலி மற்றும் காரைநகர் ஆகிய பகுதிகளிலேயே தர நிர்ணயப் பிரிவினர் பொருட்களுக்கான தரத்தைப் பரிசோதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இப்பரிசோதனை நடவடிக்கை காலை 8 மணியிலிருந்து மலை 5 மணிவரை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான காலாவதியான பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அப்பொருட் கள் கடை' உரிமையாளர்களின் பூரண சம்மதத்துட்ன் பொது மக்களின் முன்னிலையில் எரியூட்டி அழிக்கப்பட்டன.

இதேவேளை, விலைக்கட்டுப் பாட்டை மீறி சில வியாபாரிகள் செயற்படுவதாகவும் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழீழ நிதிப் பிரிவின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது. (ச)

## கூட்டணியின் கிளை அலுவலகங்களை வெளிநாடுகளில் திறக்க சங்கரி முயற்சி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்ட



ணியின் கிளை அலுவலகங்களை ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் ஆரம்பிப்பதற்காக கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அந்நாடுகளுக்கான விஜயம் ஒன்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளார்.

அதேவேளை, ஏற்கனவே கனடா மற்றும் இங்கிலாந்தில் உள்ள கட்சியின் அலுவலகங்களில் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளிலும் தான் ஈடுபட்டுள்ளதாக ஆனந்தசங்கரி கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடு ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள கட்சி ஆதரவாளர்களின் கோரிக்கையின் அடிப்படையிலேயே தான் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அவுஸ்திரேலியாவிலும் கட்சியின் அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளார். (உ)

## சுற்றாடல் சார் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுற்றாடல் சார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபை யின் யாழ்ப்பாண உப பிராந்தியத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன..

தற்போது பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந் நடவடிக்கையின் அடுத்த கட்டமாக பௌதீக இயல்புகள், குடிப்பரம்பல், உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, நிலப்பயன்பாட்டு முறை, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், இயற்கைவளங்களும் அவற்றில் மனிதனின் தாக்கம், சுற்றாடல் பிரச்சினை, சுற்றாடல் நிலையை உயர்த்துவதற்கான பிரதேசமட்ட நடவடிக்கைகள், எதிர் கால வேலைத் திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை ஒன்று வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-19)

## அகில இலங்கை ரீதியில் கல்வித்தர வளர்ச்சியில் கிளி.மாவட்டம் முன்னணியில்

(முரசுமோட்டை)

வன்னி மாணவர்களில் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் பெரிதும் அழுத்தங்களைக் கொடுத்துவரும் நிலையில், அகில இலங்கை ரீதியில் கல்வி வளர்ச்சியில் வன்னி மாவட்டம் முன்னிலையில் உள்ளது என தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நிக்கொட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட முரசுமோட்டை முருகானந்துத மகாவித்தியாலயத்திற்கான கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கூறுகையில், கடந்த க.பொ.த.(உ/த) தேர்தவில் கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்ட இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டுவரை முன்னிலையிலிருந்த யாழ்ப்பாண மாவட்டம் அகில இலங்கை ரீதியில் 14 ஆம் இடத்திலும், மிகப்பெரும் வசதி வாய்ப்புகளுடன் திகழும் கொழும்பு மாவட்டம்15 ஆம்இடத்திலும் உள்ளன.

வசதிகள் குறைந்த நிலையிலும் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைவதற்கு ஆசிரியர்கள் ஆற்றி வரும் அளப் பரிய சேவையே காரணம் என்றார். (உ)

## சிறுவிளம்பரம்

### வட்டுக்கோட்டையில் O/L ஆங்கில வகுப்பு

எதிர்வரும் டிசம்பர் மாதம் O/L பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு தனியாகவும், குழுவாகவும் ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பட்டதாரி ஆசிரியரால் நடாந்தப்படும் இவ்வகுப்புக்களின் புதியதொடர் யூலை 1ல் ஆரம்பமாகும். தொடர்புகளுக்கு P.யேசுதாசன் ''முருகன் இல்லம்'' சங்கரத்தைச் சந்தி, வட்டுக் கோட்டை, தொடர்புகள் மாலை :- 6.00 (c/274)

### போதைப்பொருள் எதிர்ப்பு தின நிகழ்வு

(பென்னாலை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தின நிகழ்வு கள் இன்று சனிக்கிழமை பி.ப. 4.00மணிக்கு பண்ணாகம் பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், சங்கானை அரசினர் வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஏ.யோகராஜா, அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை அதிபர் கு.ஜெகநாதன், காந்திஜி ச.ச.நிலைய முன்னாள் தலைவர் செ.செல்வக்குமார் மற்றும் பல்லசுட்டி நல்லொழுக்க சங்க முன்னாள் தலைவர் சி.செந்தூர்ச் செல்வம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (49)

### "பல்சுவை மணிகள்'' வெளியீட்டு விழா

அகில இலங்கை நகைச்சுவை மன்றத்தின் 2வது ஆண்டு விழாவும் இ.சிறிஸ்கந்தராசாவின் "பல்சுவை மணிகள்" நூல் வெளி யீட்டு விழாவும் எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் தெஹிவளை - கல்கிசைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளன. (18)

### மணவாளக் கோல விழா

(பொன்னாலை)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.(49)

### இசைவீடு தூது வெளியீடு

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்துள்ள இசைவிடு தூது - சமாதானம் பாடல்கள் அடங்கிய ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழா




நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றக் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன்-05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

உபபீடிபாடுகளாகச் சிக்கி இறக்கும் சிறிய திமிங்கிலங்கள், டொல்பீன்கள் மற்றும் கடற்பன்றிகளின் எண்ணிக்கை மட்டுமே ஆண்டுக்கு 300,000 க்கும் அதிகம் ஆகும்.

## யூரோ-2004தோல்வியின் எதிரொலி

# ஜேர்மன் கால்பந்து பயிற்சியாளர் பதவியை இடையில் துறந்தார் ரூடி

யூரோ-2004 போட்டியில் இருந்து ஜேர்மன் அணி வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து அந்த அணியின் பயிற்சியாளர் ரூடி வால்லர் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.



யூரோ-2004போட்டியில் செக்குடியரசு அணிக்கு எதிரான போட்டியில் 2-1என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்த ஜேர்மனி அணி தகுதிச் சுற்றிலேயே வெளியேறியது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ரூடி வால்லர் நீண்ட ஆலோசனைக்குப் பின்னர் பயிற்சியாளர் பதவியில் இருந்து தான் விலகும் முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.



பேட்டியின் போது வால்லர் மேலும் கூறுகையில், 'இந்த முடிவை திடீரென நான் எடுக்கவில்லை. செக்குடியரசு அணிக்கு எதிரான போட்டிக்குமுன்பு இருந்த பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகுவது குறித்து யோசித்து வந்தேன்' என்று கூறியுள்ளார்.

வால்லரின் இந்த முடிவு வருத்தமளித்தாலும் அதை மதிப்பதாக ஜேர்மனி கால்பந்து சங்க தலைவர் ஜெர்ஹார்டு மேயர் வோர்பெல்டர் தெரிவித்துள்ளார்.

வால்லருக்குப் பதிலாக பேயன் முனிச் அணிக்கு பயிற்சியாளராக இருக்கும் ஒட்மார் ஹிட்ஸ்பெல்டு புதிய பயிற்சியாளராக பொறுப்பேற்பார் என்று வோர்பெல்டர் தெரிவித்துள்ளார்.

யூரோ-2004போட்டியில் ஜேர்மனி விளையாடிய 3 போட்டிகளில் 2 போட்டியை ரோவில் முடித்ததுடன் ஒரு போட்டியில் தோல்வியடைந்தது.

காலிறுதிக்கு தகுதிபெற வேண்டும் எனில் செக்குடியரசு அணியை வீழ்த்தியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் விளையாடிய ஜேர்மனி அதிர்ச்சி தோல்வியடைந்து போட்டியை விட்டு வெளியேறியது.

44-வயதான ரூடி வால்லர் 2006ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற விருக்கும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிவரை ஜேர்மனி அணிக்கு பயிற்சியாளராக செயல்பட ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## ஒலிம்பிக்கில் பங்கேற்கும்

# முதல் பாகிஸ்தான் பெண் 13 வயதான ரூபப் ரசா

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் .பங்கேற்கும் பாகிஸ்தானைச் சேர்ந்த முதல் பெண் என்ற பெருமையை 13வயதாகும் ரூபப் ரசா பெற்றுள்ளார்.



பாகிஸ்தானின் அதிவேக நீச்சல் வீராங்கனையான இவர் ஒலிம்பிக்கில் 50மீற்றர் ப்ரீஸ்டைல் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ள லாகூரைச் சேர்ந்த இவருக்கு பாகிஸ்தானின் பிரபல நீச்சல் வீரர் முனவர்லக்மேன் பயிற்சியளிக்கிறார். பாகிஸ்தானின் மேற்குப் பிராந்தியத்தில் பெண்களுக்கு ஆண்கள் பயிற்சியளிக்க முடியாது. எனினும் கிழக்குப் பகுதியில் இவர் வசிப்பதால் அந்தத்தடையில்லை.

லாகூரில் உள்ள ஜீசஸ் அண்ட்மேரி கொன்மென்டில் 9ஆம் வகுப்பு பயிலும் ரசா, தேசிய அளவில் 10 பதக்கங்களை வென்றுள்ளார். அவற்றில் 7 பதக்கங்கள் அவரது வயதுப் பிரிவுக்கானது. 3 பதக்கங்கள் மூத்த வீரர் உள்ளிட்டோர் பங்கேற்கும் அனைத்துப் பிரிவுக்குமானது.

மார்ச்சில் நடைபெற்ற தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் இவர் 2 வெள்ளி 1வெண்கலம் வென்றுள்ளார்.

தடகளம், நீச்சல், குத்துச்சண்டை, ஹொக்கி, துப்பாக்கி சுடுதல், பளுதூக்குதல் உள்ளிட்ட 6 பிரிவுகளில் எதென்ஸ் ஒலிம்பிக்கில் பாகிஸ்தானில் இருந்து வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)



லொஸ்ஏஞ்சல்ஸ் ஹோம் டிப்போ மத்திய நிலையத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கரோல் ரூஸி னால் கொண்டு செல்லப்பட்ட பந்தை தடுத்துப் பறித்தார் விளையாட்டு வீரர் ஜெஸ் பார்க்.

## இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடாத்தும் கே.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்கான இறுதி ஆட்டத்தில் இன்று காலை 8.30மணிக்கு மானிப்பாய் பரிஷ் வி.க.எதிர் ஜங்ஸ்ரார் வி.க.வும், பி.ப.11.00மணிக்கு பற்ரீசியன் வி.க.எதிர் ஓல்டா கோல்ட்ஸ் வி.க.வும் விளையாடவுள்ளன.


(உ)



ஓர்க்லாண்ட் உடற்பயிற்சி விளையாட்டு வீரர் டொமியன் மில்லரும் அனாஹிம் ஏன்றலஸ்ஸை சேர்ந்த டேவிட் எக்ஸ்ரீனும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த காட்சி.

# பிரபல முன்னிலை வீரர்களுக்கு சவால் விடுக்கும் ஆண்டி ரொடிக்

விம்பிள்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் கிராண்டஸ்லாம் டென்னிஸ் போட்டியில், தரவரிசையில் இரண்டாம் நிலையில் உள்ள அமெரிக்காவின் ஆன்டிரொடிக் ஆர்ஜென்டீனா வீரர் கில்லர்மோ கோரியா உள்ளிட்ட முன்னிலை வீரர்கள் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.



மோசமான பருவநிலை காரணமாக போட்டியின் முதல் நாளிலிருந்து (ஜூன் 21) ஆட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழையால் புதன்கிழமை ஆட்டங்கள் முற்றிலும் நடைபெறவில்லை.

கடந்த வியாழக்கிழமை தொடர்ந்த ஆடவருக்கான முதல் சுற்று ஆட்டத்தில் ஆன்டிரொடிக் 6-3,7-5,6-4என்ற செட் கணக்கில் தைவான் வீரர் யூடிசூ வாங்கைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா வீரர் கில்லர்மோ கோரிய 6-4,6-7,6-3,6-7,6-3 என்ற 5 செட் கணக்கில் தென் ஆப்பிரிக்க வீரர் வெஸ்லே மூடியின் சவாலை முறியடித்தார்.

மொத்தம் 3மணி 6 நிமிட நேரம் நீடித்த இந்த ஆட்டம் மழையால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முடிவுற்றுள்ளது.

(உ)

# விளையாட்டுச் செய்திகள்

# தொடக்க ஆட்டக்காரர் சர்ச்சை முற்றுப்புள்ளிவைக்க கங்குலி முயற்சி

டெஸ்ட் போட்டிகள் ஒக்டோபரில்தான் தொடங்குகின்றன. அதற்குள் தொடக்க ஆட்டக்காரர் சர்ச்சையை ஏன் கிளப்புகிறார்கள் என்று தெரியவில்லை என்று கோபப்படுகிறார் சௌரவ் கங்குலி.

இந்திய கிரிக்கெற் அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் யார் தொடக்க ஆட்டக்காரர் என்பதில் குழப்பம் நீடிக்கிறது. வீரேந்தர் சேவாக்குடன் இணைந்து யுவராஜ்சிங் ஆட்டத்தைத் தொடக்குவார் என்று கப்டன் சௌரவ் கங்குலி அறிவித்தார்.



இதற்கு சேவாக், சச்சின் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தொடக்க ஆட்டக்காரராக ஆகாஷ் சோப்ரா தொடர வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர்

இதுபற்றிக் கங்குலி கூறுகையில்,

டெஸ்ட் போட்டிகள் ஒக்டோபர் மாதம் தான் தொடங்குகின்றன. அதற்குள் தொடக்க ஆட்டக்காரர் பிரச்சினையை இப்போதே ஏன் துவக்கிறார்கள் என்று தெரியவில்லை. யுவராஜ் சிறப்பாக விளையாடுகிறார். தொடக்க ஆட்டக்காரராகவும் அவர் முத்திரை பதிப்பார். தொடக்க ஆட்டக்காரராக இறங்கத் தயாரகுமாறு யுவராஜிடம் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதில் குழப்பமே இல்லை. அதற்காக அகாஷ் சோப்ராவையும் புறக்கணிக்கப் போவதில்லை. அவரது இடம் பற்றி தேர்வுக்குழுவினர் முடிவெடுப்பார்கள்.

பாகிஸ்தானை அவர்கள் சொந்த மண்ணில் வைத்தே ஜெயித்திருப்பதால், அடுத்து வரும் ஆசியக் கோப்பைத் தொடரை வென்றே தீரவேண்டிய நெருக்கடியுடன் களமிறங்குகிறோம். பாகிஸ்தான் தொடருக்குப் பிறகு நாம் எந்தப் போட்டியும் விளையாடவே இல்லை. என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(உ)

## கிரிக்கெற் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படுகின்ற அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த 6 வீரர்கள் பங்கேற்கும் 5ஓவர்கள் கொண்ட கிரிக்கெற் சுற்றுப் போட்டி எதிர்வரும் 3,4ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் பங்குபற்றலாம் எனவும் அணி ஒழுங்குத் தெரிவு நாளை ஞாயிற்றுக் கிழமை நிலைய மண்டபத்தில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளே நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்றன

## விளக்குகிறார் உதவிப்பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர்

பிறப்பு,இறப்பு,திருமணப் பதிவின் முக்கியத்துவங்களை அறியாத சிலர் எம் யாழ்.குடாநாட்டில் இன்னும் வாழத்தான் செய்கின்றார்கள்.இப்பதிவுகளுக்கு ஆரம்பத்தில் தேவை எதுவும் ஏற்படவில்லை. ஆனால் தற்போது வசதிகள் பல மக்களை வசப்படுத்துவதால் இப்பதிவுகளுக்கும் தேவை ஏற்பட்டு வருகின்றது. இப்பதிவுகளைக் காலங்கடந்த பின் பெறுவதற்காக அணிதிரளும் மக்களின் கூட்டம் தான் எவ்வளவு? மக்களின் சேவையையே நோக்கமாகக் கொண்ட அரச திணைக்களங்களும் அரச சார்பற்ற உதவிபுரியும் அமைப்புக்களும் மக்களின் நலன்கருதி அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கென நடமாடும் சேவைகளை நடாத்திப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றன. பொறுப்பற்ற சில குடும்ப அங்கத்தவர்களினால் பதிவுகளின்போது ஏற்படும் இடர்களும் தவிர்க்க முடியாதவையே. இது தொடர்பாக வடக்குக் கிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஜயரை வலம்புரி நேரில் சென்று செவ்வி கண்டிருந்தது. செவ்வியின் போது அவர் நமக்களித்த கருத்துக்களை வலம்புரி வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

**கேள்வி: பிறப்பு, இறப்பு , திருமணப்பதிவுகளின் முக்கியத்துவம் பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்:** மேலே கூறப்பட்ட பதிவுகள் மிகவும் முக்கியமானதொன்றே. இது ஒருநாட்டின் புள்ளிவிபரங்களில் பெரும் பங்கெடுப்பதுடன் சனத்தொகைக் கணிப்பீடு மறறும் ஒரு தனிநபர் பெறும் அரச உதவிகள் வரை இப்பதிவுகள் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பிறப்புப் பதிவினை எடுத்துக்கொண்டால் ஒருபிள்ளை பாடசாலை செல்லுவது முதல் தொழில்தேடும் வரையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இறப்புப் பதிவினை எடுத்துக் கொண்டால் இறந்தவரின் சொத்துக்கள் உரியவரை சென்றடையவும் மருத்துவத்துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்தவும் மரணத்தைத் தடுக்க எடுக்கப்படும் பல முயற்சிகளுக்கும் இப்பதிவு தேவைப்படுகிறது. திருமணப் பதிவானது இரு உள்ளங்களையும் சமுதாயத்தினையும் சட்டரீதியாக நெறிப்படுத்த உதவுகிறது. கணவன் மனைவிக்கான உரிமைகள் மறுக்கப்படும் இடத்து அதனைத் தட்டிக் கேடகவும் இது முக்கியமானதாகும். எனவே சுருங்கக் கூறினால் இப்பதிவுகள் யாவும் தன்னளவில்,சமூகளவில், நாடளவில், உலகளவில் தேவையானதொன்றாகும். பிறப்புப் பதிவானது உலக சனத்தொகையில் ஒன்றைக் கூட்டவும் இறப்புப் பதிவானது உலக சனத்தொகையில ஒன்றைக் கழிக்கவும் உதவுகிறது என்பதையாவரும் மனதில் கொள்வது நன்று.

**கேள்வி: பிறப்புப் பதிவானது எப்போது, எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்?**

**பதில்:** ஒரு பிறப்பு நடந்து 48 மணித்தியாலங்களுக்குள் அப்பிறப்பிற்கான பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். இயலாதவிடத்து அப்பிறப்பிற்கான பதிவினை மூன்று மாதங்களுக்குப் பின்னும் பதிய முடியும். அவ்வாறு பதியும் போது சில ஆவணங்கள் உரியவர்களிடமிருந்து கேட்கப்படும். அந்த வகையிலே ஒரு பிறப்புப் பதிவினை நாம் வைத்தியசாலை மூலமும் பதிந்து கொள்ள முடியும். அதாவது ஒரு குழந்தை அரசாங்க வைத்தியசாலையொன்றில் பிறந்தால் அப்பிள்ளைக்கான பதிவினை மேற்கொள்ள எம்மால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் குறிப்பிட்ட வைத்தியருடைய பதிவுடன் சரியான தகவல்களைப் பெற்றோர் பதிந்து பதிவாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாறாக, தனியார் வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தையொன்றின் பதிவினையும் எம்மால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் உரிய படிவத்தில் சரியான தகவல்களுடனும் உரிய வைத்தியசாலையின் பெயருடனும் வைத்தியரின் உறுதிப்படுத்தலுடனும் பதிவாளரிடம் அனுப்பிவைக்கப்படவேண்டும். வீட்டில் நடக்கும் பிறப்பிற்கு அப்பிரதேசத்தில் உள்ள பதிவாளரிடம் சென்று பதிவினை மேற்கொள்ள முடியும். இல்லையேல் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தரிடம் சென்று எம்மால் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் படிவத்தினைப் பூர்த்தி செய்து அவரின் பரிசீலினையுடன் பதிவாளரிடம் அனுப்பி வைக்கவேண்டும்.இவ்வாறு அனுப்பிவைக்கப்படட படிவங்கள் சரியான தகவல்களுடன் இருப்பின் அக்குழந்தைக்கான பிறப்பத்தாட்சிப் பத்திரம் பதிவாளரினால் வழங்கப்படும்.

**கேள்வி: காலங் கடந்த பிறப்புப் பதிவினை மேற் கொள்ளும் போது எவ்வாறான ஆவணங்கள் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்?**

**பதில்:** காலங் கடந்த பிறப்புப் பதிவு என்பது ஒரு பிறப்பு நடந்து 48 மணித்தியாலங்களுக்குள் பதியப்படாமல் மூன்று மாதங்களின் பின்னும் அதற்கு மேற்பட்ட மாதங்களின் பின்பும் மேற்கொள்ளப்படும் பதிவாகும். அவ்வாறு பதியும் போது உரியவரிடம் இருந்து வைத்தியரின் கடிதம் , தாய், தந்தையரின் பிறப்புச் சான்றிதழ், விவாகப்பதிவுச் சான்றிதழ், கிராமசேவையாளரின் கடிதம், குழந்தையின் யாதகம, குழந்தையின் தடுப்பூசி விபரமட்டை, நிவாரண அட்டை, குழந்தையின் மூத்த சகோதரர்கள் இருப்பின் அவர்களது பிறப்புப் பத்திரங்கள் என்பவற்றினை மாவட்டப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் அப்பதிவினை ஆதாரபூர்வமாகப் பரிசீலனை செய்து ஒப்பமிட்டுப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பார். பதிவாளர் நாயகமும் அதனை மீள் பரிசீலனை செய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை வழங்க அனுமதி வழங்குவார். ஒரு குழந்தையின் வயது கூடக் கூட பதிவினை மேற்கொள்ளும் போது வழங்கப்படவேண்டிய ஆவணங்களின் தொகையும் கூடிக் கொண்டேபோகும். உதாரணமாக 15 வயதிற்கும் 20 வயதிற்கும் உடபட்ட ஒருபிள்ளையின பதிவினை மேற்கொள்ளும் போது மேலதிகமாகப் பாடசாலை அனுமதிப் பத்திரம், அதிபரின் உறுதி மொழியுடன் கூடிய கடிதம் என்பனவும் கேட்கப்படும். இவற்றையெல்லாம் நாம் ஏன் கேட்கின்றோம் என்றால், பதிவின்போது பல தவறுகள் நேரலாம். அதனால் அத்தவறைத் தவிர்க்கும் முகமாக மேற்கூறிய ஆவணங்களை உரிய படிவத்துடன் இணைத்துத் தரும்படி கேட்கின்றோம்.



செவ்வியளித்தவர் :
ந.சதாசிவஐயர்
உதவிப்பதிவாளர் நாயகம்
வடக்கு – கிழக்கு வலயம்.

**கேள்வி: 50 வயதுக்கு மேற்பட்டவர்கள், தமக்கான பிறப்புப் பதிவினை மேற்கொள்ளமுடியுமா? அவ்வாறாயின் எவ்வாறு மேற்கொள்ளலாம்?**

**பதில்:** இவர்களுக்கான பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் தேவை முன்பு இருக்கவில்லை. ஆனால் இப்போது இவர்களுக்கும் தேவைப்படுகிறது. காரணம் இவ் வயதுடையவர்களின் மகளோ அல்லது மகனோ வெளிநாட்டில் சென்று வசிக்கின்றபோது இவர்களின் குழந்தைகளிற்கோ அல்லது அவர்கள் அங்கு பிரஜாவுரிமையைப் பெறுவதற்காகவோ, உல்லாசப் பயணிகளாக வெளிநாடு செல்வதற்காகவோ இதன் தேவைகள் தற்போது ஏற்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே இவ்வயதுடையோர் பலர் தமக்கான பிறப்புப்பதிவினை மேற்கொள்ள வருகின்றனர். இவ்வாறானவர்களுக்கும் பிறப்புப் பதிவினை சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்கும் போது பத்திரத்தைப் பெற்றுத்தரமுடியும். எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்காதவிடத்து இவர்களுக்கான பிறப்பத்தாட்சிப் பத்திரம் எக்காரணம் கொண்டும் வழங்கப்படமாட்டாது. இவர்களுக்கான பதிவைச் சட்ட முறைப்படி மேற்கொள்வதாயின் அது ஒரு நீண்ட நடை முறையாகும். முதலில் இவர்களிடம் நாம் கேட்ட ஆவணங்கள பிரதேச செயலகத்தில் பாரம் கொடுக்கப்படும். அவற்றை அவர்கள் ஏற்று பரிசீலனை செய்து கோவைப்படுத்தி உதவிப்பதிவாளர் நாயகத்திடம் அனுப்பி வைப்பார். உதவிப்பதிவாளர் நாயகம் அதனை மீளவும் பரிசீலனை செய்து அவர்களுக்கான பத்திரம் வழங்க அனுமதியளிப்பார். இவ் நடைமுறைக்கிணங்கவே இப்பதிவு மேற்கொள்ளப்படும். குறிப்பாக உதவிப் பாதிவாளர் நாயகம் யாழ்ப்பாணத்திலேயே இருப்பது இவ் விடயத்தில் எம் மக்கள் ஏனைய மாவட்ட மக்களைக் காட்டிலும் உடனடியாக சேவையைப் பெற வாய்ப்பாகவுள்ளது.

**கேள்வி: தகாத உறவு மூலம் கிடைக்கும் குழந்தைகளுக்கான பிறப்புப் பதிவினை எவ்வாறு செய்யலாம்?**

**பதில்:** பொதுவாகக் குழந்தைப் பிறப்பு, அக் குழந்தையின் தந்தை இறந்திருத்தல், விவாகரத்துப் பெற்றிருத்தல், தாய், தந்தை பிரிந்திருத்தல், சட்டப்படி மனைவியிருக்க இன்னொருவருடன உறவினை ஏற்படுத்தல் போன்ற ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருப்பின், அக்குழந்தைகளுக்கான பிறப்புப் பதிவினை மேற்கொள்ள முடியும். ஆனால், தகாத உறவு முறையினால் பிறக்கும் குழந்தைக்குத் தந்தை யார் என்று ஒப்புக்கொள்வதன் மூலம் அதற்கான பதிவினை மேற்கொள்ளலாம். அவர் அதனை மறுக்கும் படசத்தில் அதனை நாம் பதிவு செய்ய மாட்டோம். குறிப்பாக பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஒரு குழந்தையைத் தாக்கும் விடயம் இரண்டு உள்ளது. அவை கூடு நான்கும், கூடு ஆறுமாகும். அதாவது கூடு 4- தந்தையின் பெயர், கூடு 6 - பெற்றோர் விவாகமானவரா அல்லது இல்லையா?

இதில் கூடு 4 நேரடியாகவும், கூடு 6 மறைமுகமாகவும் பிள்ளையின் எதிர்காலத்தைப் பாதிக்கும் விடயஙகளாகும். இச் சந்தர்ப்பத்திலே பெற்றோரினால் சரியான ஆவணங்கள் சமர்பபிக்காத விடத்து நாம் அக்கூடு இரண்டையும் வெற்றிடமாகவே விட்டு நிரப்பிப் பத்திரத்தினைக் கொடுப்போம்.

**கேள்வி: ஒருவர் தன் விருப்பத்தின் பெயால் ஒரு குழந்தையைத் தத்தெடுத்தலின் போது, அக் குழந்தைக்கான பிறப்பத்தாட்சிப்பத்திரத்தினை எவ்வாறு பதிவு செய்து கொள்கின்றீர்கள்?**

**பதில்:** பிள்ளை ஒன்றினைத் தத்தெடுக்க வரும்பும் பெற்றோர்கள், முதலில் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதியின் அனுமதியைப் பெறவேண்டும். அவர் அதனை கொழும்பிலுள்ள பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பார். அவர் தன் அனுமதியை மகவேற்பு என்னும் பதிவில் பதிந்து அச்சான்றிதழை உரிய பெற்றோருக்கு அனுப்பி வைப்பர். அதன் பின்னரே தத்தெடுக்கும் உரிமையையும் அக் குழந்தைக்கான பிறப்பத்தாட்சிப் பத்திரததினையும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெறப்படும் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

**கேள்வி: வெளிநாட்டில் வாழும் ஒருவருடைய குழந்தைக்கு, இலங்கையில் இருந்து பிறப்பத்தாட்சிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியுமா?**

**பதில்:** வெளிநாட்டில் வாழும் எந்தவொரு இலங்கைப் பிரஜைக்கும் குழந்தை கிடைத்தால் அதனுடைய பிறப்புப் பதிவை இலங்கையில் இருந்து பெற முடியும். அவ்வாறு பெறுவதாயின், அவர்கள் வாழும் நாட்டிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்குச் சென்று சரியான ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய பதிவினை இலங்கைப் பிரஜையாகப் பதிய முடியும்.

ஆனால், இலங்கையர் அந்நாட்டுப் பிரஜையான பின்னர் அவர்களுக்குக் கிடைக்கும் குழந்தையை இலங்கைப் பிரஜையாகப் பதிய முடியாது. வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்பவர்கள் அதிலும் குறிப்பாக இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்குக் குழந்தை கிடைத்தால் அக்குழந்தைக்கான பதிவினை நாட்டிலிருந்து மீண்டபிறகு இலங்கைத் தூதுவராலயத்திற்குச் செல்லுமுன் வெளிநாட்டமைச்சரிடம் சென்று உரிய ஆவணங்களைக் காட்டித் தாம் இலங்கையர் என்பதை உறுதி செய்தபின் எமது தூதுவராலயத்தின் அனுமதியுடன் பிறப்புப் பதிவை மேற்கொள்ள முடியும்.

**கேள்வி: இறப்புப் பதிவினை எவ்வாறு மேற்கொள்கின்றீர்கள்?**

**பதில்:** இறப்புப் பதிவினை மேற்கொள்ளும் போது, ஒருவர் இறந்ததினை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்தாலே போதுமானது. ஆனால், இறந்த பல வருடங்களின் பின் அல்லது காலங்கடந்த இறப்புப் பதிவாயின் இறந்தவரின் மரணச்சடங்கின்போது, வெளியிட்ட கண்ணீர் அஞ்சலிமடல், கல்வெட்டுகள், இறந்தவரின் அடையாள அட்டை என்பவற்றுடன் இவை கிடைக்காத விடத்து அம் மரண வீட்டில் கலந்து கொண்ட இருவரின் சாட்சிக் கடிதம் போதுமானதே. இவை இருப்பின் தகுந்த பரிசீலனை மூலம் இறப்புப் பதிவானது செய்து கொடுக்கப்படும்.

**கேள்வி: திருமணப்பதிவின் போது தடையாகவுள்ளவை எவை எனக் கூறமுடியுமா?**

**பதில்:** தற்போது யாழ்ப்பாணத்தில் திருமணப் பதிவு என்பது தமிழர்களுக்கு மாத்திரமே நடைபெற்று வருகின்றது. இப்பதிவின் போது மிகவும் முக்கியமானவர்களாக மணமகன், மணமகள் மற்றும் சாட்சியங்கள் கருதப்படுகிறார்கள். இவர்களே திருமணப்பதிவொன்றிற்குப் போதுமான ஆவணங்களாகும். திருமணப்பதிவினைத் தடைசெய்யும் காரணிகளாக சாதி, மதம் என்பவை கருதப்படுவதில்லை. ஆனால், தடுக்கப்பட்ட உறவு முறைகள் (சகோதரன், சகோதரி, சித்தப்பா) இதில் பிரச்சினைக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. அத்துடன் 18 வயதிற்குக் குறைந்தவர்களும் பதிவுத் திருமணம் செய்ய இயலாது. இது ஒரு. பாலியற் குற்ற மாகவே கருதப்படும்.

**கேள்வி: பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவின் முக்கியத்துவத்தினை மக்கள் மத்தியில் (விழிப்புணர்வினை) ஏற்படுத்த எவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொண்டுள்ளீர்கள்?**

**பதில்:** சென்ற வருடம் யாழ்.அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் எனது மேற்பார்வையின் கீழ் இது சம்பந்தமாக பாரிய நடமாடும் சேவையொன்றினை நடத்தப்பட்டது. அந்த வகையிலே, யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மூலமும் விளம்பரம்.செய்து யாழ்ப்பாண மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டினோம். அதன் பயனாக கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் இதற்கு வந்திருந்தார்கள். இவர்களிடையே நாம் உடனடியாக பிறப்பு, இறப்பு, திருமணங்களுக்கான பதவினை மேற்கொண்டோம். அந்தவகையிலே எம்மால் கிட்டத்தட்ட ஆயிரதது 500 பேரின் பதிவுக்ளையே மேற்கொள்ள முடிந்தது. ஏனையவர்களினுடைய பதிவிற்கான ஆவணங்கள் போதுமானதாக இல்லை. இதற்கு குடும்ப உறுப்பினர்கள் பொறுப்பற்றதனமாக நடந்து கொண் டதே காரணமாகும். தற்போதும் நடமாடும் சேவை களை நடாத்தி வருகின்றோம். பிரதி செவ்வாய்க் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரை மக்களின் நன்மை கருதி பதிவுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஜயர் கூறினார்.

**செவ்வி கண்டவர் : புலேந்திரன் சசிரஜனி**

## இன்று ஒரு தகவல்

# சிறந்தவன் யார்?

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது. அடுத்தபடியாக ஒரு இளவரசன் பட்டத்துக்கு வரவேண்டும். அந்த ராஜாவுக்கு மூன்று பிள்ளைகள். மூன்று பேரும் ஒன்றாகப் பிறந்தவர்கள் அதனால் மூவருக்கும் ஒரே வயது. முன்னே பின்னே பிறந்திருந்தால் மூத்த மகனுக்கு அரச பதவியைக் கொடுக்கலாம். இங்கே மூன்று பேருக்கும் ஒரே வயது என்ற படியால் யார் ராஜாவாக வருவது என்பதில் பிரச்சினை வந்து விட்டது. குதிரையேற்றம, வில்வித்தை இப்படிப் பார்த்தாலும் எல்லோருக்கும ஒரே மாதிரியான திறமை தான்.

இந்த மூன்று பேரில் யார் சிறந்தவன் என்று கண்டுபிடிக்க வேணடும். எப்படிக் கண்டுபிடிப்பது? ராஜா யோசனை செய்தார். அவரால் ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை. அதனால் நேராகக் காட்டுக்குச் சென்றார். அங்கே ஒரு குரு இருந்தார். அவரிடம் போய் யோசனை சொன்னார் அதைக் கேட்டுக் கொண்டு திரும்பி வந்தார்.

மூன்று பிள்ளைகளையும் கூப்பிட்டார். மூன்று பேரிடமும் சம அளவுள்ள பணத்தைக்கொடுத்தார். அவர்கள் மூன்று பேரும் மூன்று தனித்தனி மாளிகையில் குடியிருந்தார்கள். அவர்களிடம பணத்தைக் கொடுத்து விட்டு சொன்னார். "இதோ பாருங்கள். உங்கள் மூவருக்கும் ஒரேயளவு பணம் தான் கொடுத்திருக்கிறேன் நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் இந்தப் பணத்தைக் கொண்டு நீங்கள் உங்கள் மாளிகைகளையும் நிரப்ப வேண்டும். உங்களுகக 7நாட்கள் அவகாசம. தருகிறேன். மாளிகை முழுவதையும் மற்றைய இருவரைக்காட்டிலும் யார் நன்கு நிரப்புகிறாரோ அவரே அரசன்" என்றார்.

மூவரும் யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கொடுத்துள்ள பணமோ மிகவும் குறைவானது. மாளிகையோ மிகவும் பெரிது. எதை வாங்கிப் போட்டு நிரப்புவது? முதல இளவரசன் பார்த்தான். நேராகக் குப்பை அள்ளும் இடத்திற்குப் போனான். இனிமேல் ஊருக்கு வெளியே கொண்டு போய் கொட்டும் குப்பை வண்டியெல்லாம் என் மாளிகைக்கு வரவேண்டும் என்று உத்தரவிட்டான். இவ்வளவு குறைவான பணத்தைக் கொண்டு மாளிகையை நிரப்ப வேண்டுமென்றால் அதற்கு இதுதான் வழி என்று முடிவெடுத்தான்.

இரணடாவது இளவரசன் பார்த்தான். என்ன செய்வதென்று சிலபேரிடம் யோசனை கேட்டான் "உனது சகோதரன் குப்பையால் நிரப்பி விட்டான். நீயும் அதுபோலச் செய் நமது ஊரில் புல்தான் மிகவும் மலிவு. கட்டுக்கட்டாகக் கொண்டு வந்து போடச் சொல்" என்று யோசனை சொனனார். அதுபோலவே செய்தான். பாதியள்வு நிரப்பி விட்டான். பணம் தீர்ந்து போய் விட்டது.

ஏழு நாளும் முடிந்து விட்டது. ராஜாவும் குருவும் ஒவ்வொரு மாளிகையாக பார்த்துக் கொண்டு வந்தார்கள். முதல் மாளிகையை நெருங்கவே முடியவில்லை. அவ்வளவு நாற்றம்.இரண்டாவது மாளிகை அழுகிப்போன புல் அதுவும் பாதிதான் நிரம்பியிருந்தது.

மூன்றாவது மாளிகைக்குப் போனார்கள். அங்கே போய்ப் பார்த்தால் உள்ளே எதுவுமில்லை.ஏற்கனவே அங்கேயிருந்த ஒன்றிரண்டு பொருட்களையும் எடுத்து அபபுறப் படுத்தியிருந்தார்கள். வீடு முழுவதும் காலி " நீ என்ன செய்திருககிறாய்?" என்று கேட்டார் ராஜா. பாருங்கள்"அது நிரம்பியிருக்கிறது! என்றான் மகன். ராஜாவுக்குப் புரியவில்லை. கோபம் வந்துவிட்டது.

குரு சொன்னார் "கோபப்படாதே! வீடு நிரம்பியிருக்கிறது. உனக்குப் பழக்கமில்லாத ஒன்றால் அது நிரம்பியுள்ளது. உன் பிள்ளை அகல் விளக்குகளை வாங்கித் தீபமேற்றி வைத்திருக்கிறான். மாளிகை முழுவதும் ஒளியால் நிறைந்திருக்கிறது" என்றார். மன்னர் மனதும் வெளிச்சமாகியது. இந்த மகனையே இளவரசனாக்கினார்.

இந்தக் காலத்து வாரிசுகள் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? ஒரு பையன் ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறித்தனமாக கால்மேல் கால் போட்டுக் கொண்டு படுத்துக கிடந்தான். அப்பா அவனுக்குப் புத்தி கூற ஆரம்பித்தார். "இப்படி இருந்தால் எப்படி? மற்றவர்கள் மாதிரி சுறுசுறுப்பாக இருக்க வேண்டாமா?" என்றார்." மற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள்" என்று கேட்டான் மகன். "வேலைக்குப் போகின்றார்கள் உழைக்கின்றார்கள்" என்றார். "உழைத்தால் என்ன கிடைக்கும்!" என்றான மகன். " பணம் கிடைககும்" என்றார் . " பணம் கிடைத்தால் என்ன செய்யலாம் என்றான். ' வீடு கட்டலாம்' 'வீடு கட்டினால் என்ன செய்யலாம்? "கதிரை கட்டில் எல்லாம் வாங்கிப் போடலாம்" "வாங்கிப் போட்டால்?" "அதில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு சுகமாக உட்கார்ந்திருக்கலாம்" "இப்போது நான் அதைத் தானே செய்து கொண்டிருக்கிறேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எம். பி. யின் உதவியுடன்

# கருணா குழுவினர் தப்பியமைக்கு அரசாங்கமே காரணமாம்

## சந்திரசேகரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதி கருணா உட்பட ஏனைய போராளிகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானா கொழும்பிற்கு அழைத்து வந்தமைக்கு அரசாங்கமே பதில் கூறவேண்டும் என மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஐககிய தேசிய முன்னணி ஆட்சியில் இல்லாத வேளையில் கருணா குழுவினரை பாராளுமன்ற உறுப்பினர் கொழும்புக்கு அழைத்து வந்துள்ளமை பாதுகாப்பு அமைச்சை வைத்திருக்கும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் தெரியாதிருக்க முடியாது.

ஒரு புறத்தில் தமிழரின் உரிமைகளை வழங்குதற்குப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதாக உலகிற்கு கூறிக்கொண்டு மறுபுறத்தில் தமிழர்களிற் கிடையில பிளவை ஏற்படுத்தி அவர்களைப் பலவீனப்படுத்தும் செயலகளிலேயே ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் ஈடுபட்டு வருகிறது.

கருணா கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டமைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்பதையும் தமிழர்களைப் பிளவுபடுத்தும் சக்திகளை அரசாங்கம் போஷிக்கவில்லை என்பதையும் அரசாங்கம் ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

இதேவேளை சிறுபான்மை மக்களிற்கு அரசும் ஜனாதிபதியும் தமது நம்பகத்தன்மையைத் தெளிவுபடுத்தா விட்டால் 50வருட காலத் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை அரசு உதாசீனப்படுத்தும் துரோகச் செயலைச் செய்வதாக சிறுபான்மை மக்கள் கருதுவார்கள் என்றும் மலையக மக்கள முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் மேலும் தெரிவித்துள்ளார். (61)

# நீதிமன்ற அரசியல் நடவடிக்கையுடன் தொடர்புபடுத்த வேண்டாம்

## கொழும்பு நீதிமன்றம் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐககிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கைது செய்வதற்கு பிடிவிறாந்து உத்தரவைப் பிறப்பிக்குமாறு மோசடித்தடுப்புப் பிரிவினர் தாக்கல் செய்த மனுவை கொழும்புக் கோட்டை மஜிஸ்ரேட் சரத் சீ கருணாரத்ன நிராகரித்துள்ளார்.

1கோடி 56 லட்சம் ரூபா நிதியைத் தவறான வழி யில் பயன்படுத்தினார் என்பதற்காக ரவிகருணாநாயக் கவை பொது உடமைகள் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டியிருப்பதாகவும் அதற்கான பிடிவிறாந்து உத்தரவை வழங்குமாறும் மோசடித் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி றொகான் குணசேகரா நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நிராகரித்த மஜிஸ்ரேட் அரசியல் நடவடிககைகளுடன் நீதிமன்றத்தை தொடர்புபடுத்த வேண் டாம் என்று கடுமையாக எச்சரித்ததுடன் பொலிஸாரின் நடவடிக்கைகளுடன் நீதிமன்றத்தை சம்பந்தப்படுத்தி அர சியல் லாபம் பெற முயற்சிக்க வேண்டாம் என்றும் பொலி ஸாரிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை யும் அவருடன் சம்பந்தப்பட்ட வேறு எவரையும் கைது செய்ய இதுவரை நீதிமன்றத்தில் பிடிவிறாந்து பிறப்பிக் கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ரவி கருணாநாயகக தாக்கல்செய்துள்ள முன் பிணை அனுமதி மனுவை இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள நீதவான் தீர்மானித்துள்ளார். (61)

## இராசி பலன்

**26.06.2004**

**(ஆனி 12, சனிக்கிழமை)**

**அட்டமி காலை 7.49வரை**

**அத்தம் முன்னிரவு 7.22வரை**

**இராகுகாலம் 8.55-10.25 வரை**

**சுபநேரம் 2.55-4.25 வரை**

**மேடம்**
ஆரோக்கியமான நிலை, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், தொழில் நன்மை.

**இடபம்**
உணர்ச்சிவசப்படுதல், சொத்துக்களால் கவலை, சிறுவியாதி, முயற்சி தாமதம்

**மிதுனம்**
புதிய விடயம், மனச்சஞ்சலம், பிரயாணம், தொழிலில் ஆர்வம்.

**கடகம்**
அன்னியர் சந்திப்பு, செய் தொழில் விருத்தி, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை.

**சிங்கம்**
போசன சுகக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், ரோகபயம், வீண் விவாதம்.

**கன்னி**
பெரியோர் சந்திப்பு, மனமகிழ்ச்சி, அதிகாரம், சிந்தனை மிகுதி.

**துலாம்**
சோம்பல்நிலை, சுபசெலவு, சயன சுகக் குறைவு, உறவினர் மனஸ்தாபம்.

**விருச்சிகம்**
குடும்பசுகம், எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், பெருமையடைதல்.

**தனுசு**
செய்தொழில் முன்னேற்றம், அதிகாரம், உற்சாகம், நல்ல செய்தி.

**மகரம்**
பிதா சிந்தை, கட்டுப்பாடு, இடமாற்றம், புதிய திட்டமிடல், தனவிரயம்.

**கும்பம்**
பிராயண பயம், நண்பர்கள் விரோதம், காரிய தடங்கல், ரோக நிலை.

**மீனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# திருமலை கடற்பரப்பில் கடற்படை போர்ப்பயிற்சி

(திருகேணமலை)

திருகோணமலைத் துறைமுகக் கடற்பரப்பில் கடற்படையினர் பாரியளவிலான பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலை முதல் பிற்பகல் வரை பாரிய போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்று கடற் படையினர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன்போது ஏறிக்ணைகள் உள்ளிட்ட கனரக போர்த் தளபாடங்கள் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டமையால மக்கள் பதற்றமடைந்துள்ளார்கள்.

போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ள இந்தச் சூழலில் சிறிலங்கா படையினர் இவ்வாறு பாரியளவிலான பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறித்து அவதானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளார்கள். (உ)

# கோப்பாய் சிவத்தின் ஆக்கங்களில் மனிதாபிமானம் மேலோங்கியிருக்கும்

## கலாநிதி த. கலாமணி புகழாரம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சிவத்தின் எழுத்துக்களில் மனிதாபிமானப் பண்பு மேலோங்கியிருக்கிறது என கலாநிதி த. கலாமணி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற கோப்பாய் சிவத்தின் "தார்மீகக் கோபங்கள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வழங்கிய ஆய்வுரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில்,

பேராசிரியர் சபாஜெயராசா கூறியது போன்று கோப்பாய் சிவத்தின் இலக்கியங்களில் தர்ம அளவியல் மேம்பட்டுக் காணப்படுகின்றது. இப்படியிருக்க வேண்டிய சமுதாயம் இப்படி இருக்கின்றதே என ஏங்குகின்ற இயல்பை இவரது கதைகளில் காணலாம் எனக் கூறினார்.

தலைமை வகித்த எழுத்தாளர் துரை எங்கரசு தனதுரையில்,

இணுவில் கலை இலக்கிய வட்டம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டது.

இவ்வட்டத்தின் உந்துதலினால் இன்று பல எழுத்தாளர்கள் இணுவிலில் தோன்றியுள்ளனர்.அவ்வகையில் கோப்பாய் சிவத்தின் இந் நூல் வெளியீட்டை நடத்துவதில் நாம் பெருமைப்படுகின்றோம் எனத் தெரிவித்தார்.

செங்கை ஆழியான் இந்நூலை வெளியிட்டு வைத்தார். கலாநிதி த. கலாமணியும் பிரபல எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் ஆய்வுரைகளை நிகழ்தினர்.

பேராசிரியர் சபா ஜெயராசா வாழ்த்துரை வழங்கினார். இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு முதற் பிரதியையும் வாசுதேவக் குருக்கள், கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் ஆகியோர் இணைப் பிரதிகளையும் பெற்றனர். (18)

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின் கண்சோர்வு - குறள்

வலம்புரி

## பேராசிரியர் நந்திக்கு ஓர் அன்பு மடல்

பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) உலக றிந்த கல்வியாளர். இலக்கியப் படைப்பாளி. தான் பெற்ற மருத்துவக் கல்வியை யாழ்ப்பாண மண்ணிற்காக அர்ப்பணித்த பெருந்தகை. யாழ்ப்பாணத்தில் விரல் விட்டு சுட்டிக்காட்டக்கூடிய சான்றாண்மைப் பெரியார்களில் ஒருவர். இத்தகைய சிறப்புவாய்ந்த பேராசிரியர் நந்தி அவர்கள், யாழ்ப்பாணக் கல்வியின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் நிலையத்தில் ஆற்றிய உரையில், இந்து ஆலயங்கள் குறித்துப் பேசிய விடயம் இந்து சமயத்தின்பால் ஈர்ப்புக் கொண்டவர்களுக்கு சலனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், இந்து ஆலயங்கள் பொது மக்கள் மத்தியில் நல்லெண்ணம், பழக்கவழக்கம் என்பனவற்றை ஏற்படுத்தத் தவறிவிட்டதெனக் குற்றம் சாட்டியுள்ள அவர் இந்து ஆலயங்கள் வன்முறைகளுக்குத் தூபமிடுகின்றன என்ற மிகப் பெரும் குற்றத்தைச் சுமத்தியுள்ளார்.

பேராசிரியர் நந்தியின் மேற்போந்த குற்றச்சாட்டு எந்தநோக்கில், எந்த ஆய்வின் அடிப்படையில் கூறப்பட்டதென்பது ஆராயப்பட வேண்டியதாக இருப்பினும்; இந்து சமயம், இந்து ஆலயங்கள், இந்து மதகுருமார்கள் இன்று எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், சிக்கல்கள் என்பன குறித்தும் குறிப்பிடப்படுவது அவசியமாகும்.

ஈழவள நாட்டை சிவபூமியெனப் போற்றிப் புகழ்ந்தவர் திருமூல நாயனார். அவர் ஈழவளநாட்டைப் பார்த்து சிவபூமியெனக் குறிப்பிட்டிருந்தாலும் அவரின் விழிப்பு யாழ்ப்பாணத்திற்கே பொருந்தும் என்பது கல்வியாளர்கள் கண்ட முடிபு.

ஒரு காலத்தில் சிவபூமியெனப் போற்றப்பட்ட ஈழவளநாட்டில் இந்து சமயம், இந்து ஆலயங்கள் அந்நியரின் வருகையால் பெருந் துன்பங்களையும், அவலங்களையும் சந்திக்க நேரிட்டது. அந் நிலை இன்று வரை நீடிக்கவே செய்கிறது.

அந்நியராட்சியுடன் ஊடுருவிய மதமாற்றம் இன்னமும் நின்றபாடாகவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் எத்தனையோ கிறிஸ்தவ சமயப் பிரிவுகள் குடிபுகுந்துள்ளன. அவற்றன் இலக்குகள் யாவும் இந்து மதத்தை நிர்மூலமாக்குவதாகும். இதற்காக இந்து சமயத்தவர்களை மதமாற்றுவதில் அந்த அமைப்புகள் வேகமாகச் செயற்படுகின்றன.

இந்து ஆலயங்களுக்கு முன்பாக, தமது சமய அமைப்புக்களை நிறுவி சன்னதம் ஆடுகின்றனர். இவற்றை இந்து சமயத்தவர்கள் கண்டும் அமைதி கொண்டுள்ளனர் எனில், அதற்குக் காரணம் இந்து ஆலயங்கள் போதித்த பொறுமை, பிற சமயங்களை மதிக்கும் மாண்பு, சமயத்தால் அதிகாரம் காட்டாதே என்ற உபதேசம் என்பதைப் பேராசிரியர் ஒருபோதும் மறந்திருக்க மாட்டார் என்பது தெரிந்த விடயம்.

இந்து ஆலயங்கள் சார்பாக முளைவிடும் நிதி விவகாரங்கள் ஆலயத்தின்பால்-ஆண்டவன்பால் கொண்ட அன்பின் வெளிப்பாடெனக் கூறிக் கொள்ள முடியும்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் மதமாற்றத்தால் வெடிக்கக் கூடியபெரும் வன்முறைகளை இந்து ஆலயங்கள் அடக்கி வைத்துள்ளன என்ற உண்மையை உணர்ந்து கொள்ளும் போது தற்போது இந்து ஆலயங்களில் நடைபெறுகின்ற சிறு பிணக்குகள் விவகாரங்களைப் பெரிதுபடுத்துவது இந்து சமயத்தை மேலும் புனிதப்படுத்துவதற்காக இருக்க முடியுமே தவிர, இந்து ஆலயங்களில் குறைகாண்பதாக இருக்க முடியாது. இதனைக் கருத்தில் கொண்டே பேராசிரியர் நந்தி அவர்கள், இந்து ஆலயங்கள் வன்முறைகளுக்குத் தூபமிடுவதாகக் கூறியிருக்க முடியும்.

அதாவது, இராமன் சீதையை அக்கினிப்பிரவேசம் செய்வித்து அவளின் கற்புத்திறனைக் காட்ட முற்பட்டதுபோல் பேராசிரியர் நந்தியவர்களும்,

* மதமாற்றத்தால் ஏற்படக் கூடிய வன்முறைகளை,

*அரசியல் விவகாரங்களில் கிறிஸ்தவ அமைப்புக்கள் முந்தியடித்து முன்னுக்கு நிற்பதால் ஏற்படக் கூடிய வெறுப்பை,

*பொது நிகழ்வுகளில் இந்து மதம் புறக்கணிக்கப் படுவதால் கிளர்ந்தெழக் கூடிய ஆர்ப்பாட்டங்களை இந்து ஆலயங்கள் அடக்கி வைத்திருக்கின்றன என்பதைப் படம் போட்டுக் காட்டுவதற்காக முற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கலாம் போல் தெரிகிறது.

# கருணா கொழும்புக்கு தப்பிச் செல்ல இலங்கை இராணுவம் உதவவில்லை

## மங்களவின் கருத்தை மீண்டும் மறுதலிக்கிறார் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் தளபதி கருணா தப்பிச் செல்ல இராணுவம் உதவியதென்று வெளியான செய்தியை மீண்டும் மறுத்துள்ளார் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.**

நேற்று முன்தினம் கொழும்பு இராணுவ மருத்துவ மனையைச் சுற்றிப்பார்க்கச்சென்றரத்தினசிறி விக்கிரம நாயக்க அதன் முடிவில் நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்விதம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த இரண்டரை வருடங்களாக யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தாலும் பாதுகாப்புப்படையினரின் போரிடும் சக்தியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. மிகப்பலமான இராணுவ போர்ப்பலத்துடனேயே அரசு தொடர்ந்தும் இருந்து வருகின்றதுடன் தற்போது அனைத்துப் பாதுகாப்புப் படையினரும் உசார் நிலையிலேயே உள்ளனர் என்று குறிப்பிட்டார்.

தற்போதைய அரசிலும் பாதுகாப்புப் படைகள் மீதும் அபகீர்த்தியை உண்டுபண்ணுவதற்காக சில அநாமதேய சக்திகள் விசமப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. எமது அரசோ, இராணுவமோ எது விதத்திலும் கருணா குழுவுக்கு இதுவரை உதவவில்லை என்றும் அக் குற்றச்சாட்டை நிராகரித்தார்.

இதேவேளை, கருணாவுக்கு அரசு உதவியது என்ற குற்றச்சாட்டை முதலில் ஜனாதிபதி சந்திரிகா நிராகிரித்திருந்ததும் பின்னர் பாதுகாப்புச் செயலாளரும் அரச பேச்சாளருமான சிறில் ஹேரத் மறுதலித்திருந்ததும் அறிந்ததே.

திடீரென ஐ.தே.மு. உறுப்பினர் அலிசாஹீர் மௌலான தான் கருணாவுக்கு உதவியதையும் அவரைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று இலங்கை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்ததையும் பகிரங்கமாகக் ஒத்துக்கொண்டார்.

அதைத்தொடர்ந்து ஆளும் ஐமசுமு. அரசின் தகவல் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர கருணா தப்பிப்பதற்கு அரசு உதவியதையும் இராணுவத்தின் பாதுகாப்பையும் ஒத்துக் கொண்டார்.

அளும் கட்சியின் இன்னுமொரு அமைச்சரான டக்ளஸ் தேவானந்த தனக்கு கருணாவுடன் உள்ள தினசரி நேரடித் தொடர்பையும் சர்வதேச ஊடகத்திடம் பகிரங்கமாக ஒத்துக் கொண்டார்.

எனினும் ஆளும் கட்சியின் இன்னுமொரு அமைச்சரான ரத்தினசிறி விக்கிரமநாயக்க இன்று அதே கருத்தை மீண்டும் நிராகரித்துள்ளார்.

இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை ஆளும் கட்சியின் அமைச்சர்கள் வெளியிட்டு வருகையில் ஜனாதிபதியும் பிரதமரும் மௌனம் சாதிப்பது பலத்த சந்தேகத்தையே கிளப்பியுள்ளது. (உ-121)

## கஜேந்திரன் எம்.பியிடம்

# தென்மராட்சி மக்கள் தம் அபிலாஷைகளை எடுத்துரைப்பு

கைதடி, நாவற்குழி தெற்கு, கோயிலாக்கண்டி ஆகிய பிரதேச மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனைகள் தொடர்பாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், நேரில் சென்று ஆராய்ந்தார் அப்போது அப்பிரதேச மக்கள் தாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகள் பற்றி மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்தனர்.

இவற்றுக்கான தீர்வை விரைவில் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

★ மீள்குடியமர்வின பின் அரசாங்கத்தால் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்குயமர்விற்கான உதவிகள் மறுக்கப்பட்டுள்ளன.

★ அப்பிரதேச அபிவிருத்தி விடயத்தில் அதிகாரிகள் புறக்கணித்தல்

★ தனியானதோா கிராமசேவகர் பிரிவினுள் அப்பிரதேச மக்களை உட்படுத்த வேண்டும்.



★கிராமத்துக்குச் செல்லும் கடற்கரை வீதி நீண்டகாலமாகத திருத்தப்படாது அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப் பதனால் மக்கள் பல்வேறு சிரமஙகளை எதிர் நோககுகின்றனர்.

★மக்களின் பிரதான தொழில் மீன்பிடி, ஆயினும் அவர்கள் சுதந்தி ரமாகத் தொழிலுக்குச் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது.

★கடலுக்குள் இராணுவ முள்வேலி அமைக்கப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட தூரத்திற்கப்பால் தொழிலாளர்கள தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

★கடலுக்குள் போடப்பட்டிருக்கும் இறால் கூடுகளுக்குள் அகப்பட்டிருக்கம் இறால்களை அதிகாலை வேளையில் செல்லும் இராணுவத்தினர் களவாடிச்செல்கின்றனர். இதனால் மீனவர்கள் பெரும் நஷ்டத்திற்குள்ளாக்கப்படுகின்றனர்.

★ இன்று நிலவும் சமாதான காலத்திலும் இவ்வகையான இராணுவக் கெடுபிடிகள் காணப்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், அவ்வாறான கெடுபிடிகள் நீக்கப்பட்டு சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

இச் சந்திப்பில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன்,பதில் இணைப்பாளர் குகன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ)

# ஆயிரத்து 300ற்கும் அதிகமான மகஜர்கள் காலாவதியாகின

(கொழும்பு)

கடந்த அரசின் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆயிரத்தி 300ற்கும் அதிகமான பொது மக்களின் மகஜர்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சிக்காலத்தில் 600 மகஜர்கள் பரிசீலிக்கப்பட்டு 20 மகஜர்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் உதவிகளும் செய்யப்பட்டன.

மிகுதி மகஜர்கள் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் காலாவதியாகிவிட்டன என பாராளுமன்ற செயலாள் நாயகம் பிரியானி விஜய சேகரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை,ஐக்கிய மக்கள் சுகந்திரக்கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் மக்களின் பிரச்சினைகள் அடங்கிய 40 மகஜர்கள் கிடைத்துள்ளன என்றும் ஆனால் இதுவரை பாராளுமன்றத் தெரிவிக்குழுவுக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமையால் உரியவர்களிடம் அவை கையளிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் இப் பிறவிலேயே ஒருவன் இறைவனை அடைய முடியாது போனால் அவன் வீணிற் பிறந்த வனே ஆவான். ஆன்ம வாழ்வில் முன்னேறுவதறகுரிய முக்கிய சாதனங்களில் ஒன்று தூய விஞ்ஞானிகளின் கூட்டுறவே.**

சுவாமி விவேகானந்தர்.

## கலாசாரத்தைப் பேணும் குழு

# துர்நடத்தையில் ஈடுபட்ட ஏழு பேரை பிடித்து எச்சரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி துன்னாலைப்பகுதியில் கலாசரச் சீரழிவுகளில் ஈடுபட்ட ஏழுபேர் கலாசாரத்தைப்பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

அண்மையில் புத்தூர்ப்பகுதியைச் சேர்ந்த மூன்று யுவதிகளும் துன்னாலைப்பகுதியைச் சேர்ந்த நான்கு குடும்பஸ்தர்களுமே துன்னாலைப் பகுதியில் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவஏழு பேரும் துன்னாலைப்பகுதியில் உள்ள ஆள் நடமாட்டமற்ற பற்றைப்பகுதி ஒன்றில் வைத்துப்பிடிக்கப்பட்டதாக கலாசாரத்தைப்பேணும் குழுவினர் தெரிவித்தனர். (உ-43)

# ஹலோ ட்ரஸ்ட் மீதான தாக்குதலுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மனித நேயத்தை மையமாகக் கொண்டு கண்ணிவெடி அகற்றிச் செயற்படவந்த பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த சர்வதேச தொண்டு நிறுவனமான ஹலோட்ரஸ்ட் மீது நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் நடவடிக்கையினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.அவ்வறிக்கையில் மேலும், மக்களின் உயிர்களைக் காவுகொள்கின்ற கண்ணிவெடிகளை தமது உயிர்களைப் பணயம் வைத்து அகற்றி மக்களின் பாதுகாப்பான வாழ்விற்கு உதவிசெய்யும் இவர்களின் பணி பாராட்டப்பட வேண்டியது.

தனிப்பட்ட குரோதங்களால் ஒரு ஸ்தாபனத்தை நிர்மூலமாக்கும் நடவடிக்கை வேதனை அளிக்கின்றது. குரோதங்கள், விரோதங்கள் பிரச்சினைகள் பேசித்தீர்க்கப்பட வேண்டியவையே தவிர வன்முறை தான் அதற்கு முடிபல்ல.

இத்தகைய வன்முறைக் கலாசாரத்தால் எதிர்காலத்தில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தமது தொண்டுகளைக் கைவிட்டுத் திரும்பும் நிலையேற்படலாம். அப்படித் திரும்பும் பட்சத்தில் பாதிக்கப்படப்போவோர் எமது மக்களே.

கண்ணிவெடி இடர் அபாயக் விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கின்ற இவ் வேளையில் நடைபெற்ற இச்சம்பவம் மிகவும் வேதனையானது. இப்படிப்பட்ட செயல்கள் இனிவரும் காலங்களில் இடம் பெறாமல் தவிர்க்கப்படுவதுடன், இத்தகைய மிருகத்தனமான செயலை இணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது என்றுள்ளது.

(உ-16)

## ஜாதிக ஹெல உறுமய தேரர் சத்தியப்பிரமாணம் செய்யும் தடை மேலும் நீடிக்கிறது

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய அக்மீமன தயாரட்ண தேரர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதைத் தடுக்கும் முகமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு இம்மாதம் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ரட்ணசீல தேரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிவான் எச்.எம். சமரக்கோன் தடையுத்தரவை நீடிக்க உத்தரவு பிறப்பித்தார்.

ஜாதிக ஹெஉறுமய சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இவ்வாறான தடையுத்தரவைப் பிறப்பிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு சட்ட உரிமை கிடையாதென்று சுட்டிக் காட்டினார்.(ந-121)

## ரஷ்ய நாட்டுத் தூதுவர் கொழும்பில் காலமானார்

(கொழும்பு)

இலங்கைக்கான ரஷ்யநாட்டுத் தூதுவர் மிக்கேல் ஹார்விக் ஹாவோ (வயது 56) கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் நேற்று முன்தினம் காலமானார்.

இருதயநோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு மரணமாகியுள்ளார்.

அவரது பூதவுடல் நேற்றிரவு ரஷ்யாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.2002ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 3ஆம் திகதிஇலங்கைக்கான ரஷ்யநாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்ட அவர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் தூதுவராகப் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-121)

# தேசியத் தலைவரில் நம்பிக்கை கொண்டு விடுதலைப் போரை முன்னெடுக்க வேண்டும்

## அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(மட்டக்களப்பு)

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் காலத்தில் எமக்கு விடுதலைகிடைக்க வேண்டும். நாம் அனைவரும் எமது தேசியத் தலைவரில் நம்பிக்கை கொண்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இகௌசல்யன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை குழுவூனமடு, கொல்லநுலை கிராமத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்ட சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாம் எமது போராட்டத்தை முன்னெடுப்பதுடன் எமது மக்கள் பொருளாதார அபிவிருத்தியிலும் கல்வியிலும் முன்னேற வேண்டும். எம் மத்தியில் சுலபமாகக் கிடைக்கும் இயற்கை வளங்களைக் கொண்டுபொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைய வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி, பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ்அமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(த)

## போதைப் பொருள் எதிர்ப்பு தினம்

(பொன்னாலை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினம் இன்று பிற்பகல் 4 மணிக்கு பல்லசுட்டி காந்திஜீ சனசமூக நிலையத்தில் வடபிரதேச நல்லொழுக்க 'சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கௌரவ விருந்தினர்களாக சங்கானை அரசினர் வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஏ.யோகராசா, அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை அதிபர் கு.ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-49)

# சிங்கப்பூர் பிரதமர் இலங்கை வந்தார்

(கொழும்பு)

சிங்கப்பூர் பிரதமர் போல் சொக் டோங் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக பொருளாதார உறவுகளை அபிவிருத்தி செய்வது பற்றி அரசாங்கத் தலைவர்களோடு பேச்சுவார்த்தைநடத்துவதற்காகவே அவர் இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோரை நேற்று மாலை சந்தித்து உரையாடிய அவர் பிரதம மந்திரி, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கும் அவர் செல்வார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள அவர் உல்லாசப் பயணத் துறை முதலீடு குறித்து, முதலீட்டுச் சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.(த)

## ஈழத் தமிழரை பாதுகாப்பாக அழைத்துவர அரசாங்கம் ஏற்பாடு

(மன்னார்)

இந்தியாவில், இருந்து நாடு திரும்பும் இலங்கையர்களை அரசாங்கத்தின் ஊடாக பாதுகாப்பான முறையில் தாயகத்திற்கு அழைத்து வருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்புவோரை சிலர் சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக அழைத்து வருவதால் காணாமல் போதல் கடலில் மூழ்கி உயிரிழத்தல் போன்ற பல்வேறு அனர்த்தங்களும் இடம் பெற்று வருகின்றன

இதனைத் கருத்தில் கொண்டே தாயகம் திரும்ப விரும்பும் ஈழத் தமிழ் அகதிகளை பாதுகாப்பான முறையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மன்னார் மாவட்ட மக்கள் விடுத்த தொடர்கோரிக்கைகளைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது(உ-4,61)

## யாழ்.பல்கலை...

கழகப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு ஆயத்தமான போது மாணவர்கள் அவர்களின் வாகனத்தை முற்றுகையிட்டு துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் வந்தால் மட்டுமே வாகனத்தைச் செல்ல அனுமதிப்பதாகத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் துணைவேந்தருடன் தொடர்பு கொண்டு அவரின் வருகையை உறுதிப்படுத்தியபின்னர் யாழ்பல்கலைக் கழகப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வர அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை நேற்று மாலை வவுனியாவுக்குச் சென்ற துணைவேந்தர் எஸ்மோகனதாஸ் மாணவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வீதிவிபத்துக்களை..

னச்சாரதிகளின் தவறுகளினால் ஏற்படும் விபத்துத் தவிர வீதிவிபத்துக்களுக்கு ஏனைய பல காரணங்களும் ஏதுவாகிவிடுகின்றன எனவே இக் காரணங்களை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி செப்பனிடப்படாத குன்றும் குழியுமாக இருக்கும் முக்கிய வீதிகளை உடனடியாக செப்பனிடுதல்,முக்கிய சந்திகளில் வீதிவிளக்குகளைப் பொருத்துதல் அனுமதிப் பத்திரம் இல்லாத வாகனங்களை பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்த அனுமதிக்காமை. நகரில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுதல் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் பாடசாலைகள், சந்தைகள், வைத்தியசாலை போன்ற இடங்களில் வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதற்கான சமிஞ்ஞைகளை நாட்டுத்தல், நகரின் பிரதான வீதிகளை இயன்றளவு ஒருவழிப் பாதையாக மாற்றுதல் வீதிகளில் போடப்பட்டுள்ள தேவையற்ற வீதித் தடைகளை அகற்றுதல் என்பனவற்றை வெகுவிரைவாக நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டது.

இவற்றுக்குப் பொலிஸாரின் உதவியைப் பெறுவதெனவும், தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை சாரதிகளின் தவறுகளினால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர ஏனைய காரணிகள் விபத்துக்குக் காரணமாக அமைந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென நீதிபதி அங்கு தெரிவித்தார்.(த-19)

# புலிகளின் அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீது நேற்று முன் தினம் நள்ளிரவு கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்முனைவீதி களுவாஞ்சிக் குடியில் உள்ள பட்டிருப்புக் கோட்டை அரசியல்துறை அலுவலத்தின் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் இந்தக் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் இடம்பெற்ற வேளை அலுவலகத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட போராளிகள் இருந்ததாகவும், கைக்குண்டு அலுவலகத்திற்கு வெளியே வீழ்ந்து வெடித்ததால் சேதங்கள் எதுவும் இடம் பெறவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தனது விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (ந-121)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வஷியா பண்டாரிக்குளம்ஸ்ரீ விடல விநாயகர் ஆலய நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் விஞ்ஞாபனம் எதிர்வரும் 2ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் காலை 8 மணி முதல் பிற்பகல் 4மணிவரை எண்ணெய் சாத்துதல் இடம் பெறவுள்ளது. (ச)

## பொதுக் கூட்டம்

(இருபாலை)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் ஓய்வு பெற்றோர் சங்க அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தலைவர் இ.குமாரசாமி தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ச-84)

## கருணாவின்..

அழைத்துச் சென்ற மூன்று தினங்களின் பின்னரே தாம் அதனைக் கண்டுபிடித்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயல் பிழையானதென அவரிடம் தாம் கூறியதுடன் தம்மைச் சந்தித்து விளக்கம் கூறவேண்டுமென அவரிடம் கேட்டுக் கொண்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கருணாவின் மனைவியும் அவரது மூன்று பிள்ளைகளும் கடந்த வருடம் மலேசியாவுக்குச் செல்ல உதவியவர் அலிஸாகீர் மௌலானவே எனவும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படும் பொலிஸ்பாதுகாப்புடன் அலிஸாகீர் மௌலானாவின் வீட்டில் கருணாவின் மனைவி தங்கியிருந்ததாகவும் அவின் காரிலேயே கருணாவின் மனைவி காரை ஓட்டக் கற்றுக் கொண்டார் எனவும் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி ஒருவர் கூறியதாக பிபிஸி மேலும் தெரிவித்தது(ச)

## அமெரிக்க...

கப்டன் எஸ்.எஸ்.ரணசிங்க தலைமையில் 12 கடற்படை அதிகாரிகளையும் மாலுமிகளையும் கொண்ட இலங்கைக் கடற்படைக் குழுவொன்று கடந்தவாரம் அமெரிக்காவுக்குப் பயணமாகியிருந்தது. இக் குழு அமெரிக்காவின் வடமேற்குக் கரை போர்ட்லெண்ட் எரிகோன் கடற்பிரதேசத்தில் இக் கப்பலை பரீட்சார்த்தமாக வெள்ளோட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளது.

கடற்படைக் கப்டன் எஸ்.எஸ். ரணசிங்கா இக் கப்பலின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

210 அடி நீளமான இக் கப்பலில் 70 பேர் பணியாற்ற முடியும். இரண்டு உலங்குவானூர்திகளை நிறுத்தி வைக்கக் கூடிய இறங்கு தளமும் காணப்படுகின்றது.

நேற்றைய கப்பல் கையளிப்பில் கருத்துத் தெரிவித்த அமெரிக்க கடற்கரையோரப் பாதுகாப்புப் பிரிவுத் தளபதி வைஷ்அட்மிரல் தோமஸ் கொலின் இருநாடுகளுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்பில் கப்பல் கையளிப்பு ஒரு மைல் கல் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்காவில் தங்கியுள்ள கடற்படைத் தளபதி, அமெரிக்க கடற்படை அதிகாரிகளையும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பும் வழியில் கடற்படைத் தளபதி தயாசந்தகிரி தலைமையிலான குழுவினர் லண்டனுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். (த)

## சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது சங்கம நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மாவட்ட, கோட்ட பிரதேச மற்றும் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் அரச திணைக்களங்களின் தலைவர்கள் துறைசார்ந்த வல்லுநர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ச-49)

## பட்டதாரிகளுக்கு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அரச சேவையில் உள்ள கீழ் உழைப்புப் பட்டதாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதன் செயலாளர் கு.பற்குணராசா கேட்டுள்ளார். (ச)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட வலய ஸ்ரீ சத்தியசாயி சேவா ஸ்தாபனத்தால் நடத்தப்படும் விசேட கருத்தரங்கு இன்று காலை 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கருத்துரையினை பிரதம பேச்சாளர் கலாநிதி ஆட்ஓங்யும்சாய் நிகழ்த்தவுள்ளார். (ச)

## கண்காணிப்பு...

போது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும், அரச பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ள எரிக் சொல்ஹெய்ம் தடைப்பட்டுள்ள சமாதான முன்னெடுப்புகள் குறித்து ஆராய்வாரென்றும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனின் இந்தியாவிற்கான பயணம் குறித்தும் விளக்குவாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.